# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 283 | சனி, ஏப்ரல் 20, 2024 | 14 பக்கங்கள்


# தமிழ்ப் பொது வேட்பாளர்?

அகிலன்

## ஒருவிரல்



## புரட்சி

துரைசாமி நடராஜா

## ஈரானின் தாக்குதல்



## வெற்றியா? தோல்வியா?

வேல்ஸில் இருந்து அருஸ்


info@ilakku.org



© 2024 இலக்கு இணையம்

## நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி வாரம் தமிழர் தாயகத்தில் அனுஷ்டிப்பு



நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிலையில் அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திக்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள ஊர்தியானது இந்த வாரம் வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்ட பந்தலுக்கு முன்பாக அஞ்சலிக்காக கொண்டு வரப்பட்டது.



இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்க தலைவி கா. ஜெயவனிதா ஈகைச்சுடரினை ஏற்றி வைத்தது டன் மற்றும் மலர்மாலை அணிவித்து அடுத்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.


இதனிடையே கிழக்கிலும் அன்னை பூபதியின் நினைவாலயத்தில் நினைவஞ்சலிகள் இடம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## லண்டனில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதியில் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் பொருட்கள் விற்பனை

லண்டனில் தமிழர்கள் அதிகம் வாழும் Hayes பகுதியில் உள்ள கடை ஒன்றில் பொது மக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. Hillingdon ஆணைக்குழுவின், வர்த்தக தரநிலை அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து பாதுகாப்பற்ற பொருட்களை விற்றதற்காகவும் குடியிருப்பாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தியதற்காகவும் Hayes பகுதி கடைக்காரர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

AG Food and Wine Limited வர்த்தகத்தின் இயக்குனர் அமர்ஜித் சிங் என்பவர் Uxbridge நீதிவான் நீதிமன்றத்தில் தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டார்.



அதற்கமைய, பாதுகாப்பற்ற அழகுசாதனப் பொருட்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்களை விற்பனை செய்ததற்காக 4,400 பவுண்டுகளுக்கு மேல் அபராதம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## அரசியல் கைதிகள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்–கஜேந்திரன்

அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கொழும்பு – மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அரசியல் கைதி செ.ஆனந்தவர்ணன் எனப்படும் அரவிந்தனை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணன் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டு அன்றைய தினமே கைது செய்யப்பட்டு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் வெலிக்கடையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரது முகநூலில் கடந்த 2020 இல் ஒரு படமும் 2022 இல் ஒருபடமும் பகிரப்பட்டன எனவும், அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கம் செய்ய அவர் முயற்சிக்கின்றார் எனவும் பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தி அவரைத் தடுத்துவைத்துள்ளனர். ஏற்கனவே அவர் சுமார் 9 ஆண்டுகள் கொடிய சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கும் பல பொய் வழக்குகளுக்கும் முகம் கொடுத்து விடுதலையாகி தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அடிப்படை வசதிகள் மிகவும் மோசமாகவுள்ள சிறையில் ஆனந்தவர்ணன் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள மகசின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## மர்மமான முறையில் அமெரிக்காவில் இறக்கும் இந்திய மாணவர்கள்

இந்திய மாணவர்களுக்கு அமெரிக்காவில் கல்விகற்பது மிகவும் விருப்பமான ஒன்று ஆனால் தற்போது அங்கு பெருமளவான இந்திய மாணவர்கள் மர்மமான முறையில் மரணம் அடைவது இந்தியாவை கவலை கொள்ள வைத்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.



கடந்த ஒரு மாதத்தில் 14 மாணவர்கள் அங்கு கொல்லப்பட்டுள்ளனர். மாணவர்களின் இறப்பு என்பது அந்த குடும்பத்தினருக்கு மிகவும் மிகவும் துன்பமானது. எனவே நாமும் அது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம். அமெரிக்காவில் உள்ள ஆபத்தான பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என நாம் மாணவர்களை எச்சரித்துள்ளோம் என ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஒரு மில்லியன் இந்திய மாணவர்கள் தற்போது அமெரிக்காவில் கல்விகற்று வருகின்றனர். இது தொடர்பில் நாம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம். சில மரணங்கள் தற்கொலை என்ற போதும் சிலர் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

ஒகியோ மாநிலத்தில் 25 வயதான மொகமீட் அப்துல் என்பவரை கடத்திய போதைவஸ்த்து குழுவினர் தெலுங்கானாவில் உள்ள அவரின் தந்தையிடம் பணம் கேட்டுள்ளனர். எனினும் பின்னர்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## அமெரிக்காவின் கடன்சுமை அதிகரிப்பு நாணயநிதியம் எச்சரிக்கை



என்றுமில்லாதவாறு அமெரிக்காவின் கடன் சுமை அதிகரித்து வருவது அமெரிக்க அரச தலைவர் ஜோ பைடனின் நிதிக்கொள்கை தவறானது என்ற கருத்தை ஏற்படுத்தியுள்ளதாக அனைத்துலக நாயணநிதியம் கடந்த புதன்கிழமை(17) எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா கட்டுப்பாடில்லாத செலவுகளை மேற்கொள்வது பணவீக்கத்தை ஏற்படுத்துவதுடன், நாட்டின் பொருளாதாரத்தின் உறுதித்தன்மையும் சீர்குலைந்து

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## பாலஸ்தீனத்திற்கு ஐ.நாவில் நிரந்தர உறுப்புரிமை – அமெரிக்கா எதிர்ப்பு


இருநாடுகள் என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளப்போவதாக அமெரிக்கா கூறிவருவது பொய்யானது என்பதை அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதுவர் தோமஸ் கிறீன்பீல்ட் உறுதிப்படுத்தியுள்ளார். அதாவது ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனம் நிரந்தர உறுப்புரிமை பெறுவதை அமெரிக்கா ஆதரிக்காது என அவர் கடந்த புதன்கிழமை (17) தெரிவித்துள்ளார்.



ஐ.நாவில் நிரந்தர உறுப்புரிமை உள்ள நாடாக பாலஸ்தீனம்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## அரசுகளை விட கூகுள் மற்றும் அப்பிள் ஆபத்தானவை – ரெலிகிராம் நிறுவுனர்



மக்களின் பேச்சுரிமையை தடுப்பதில் அப்பிள் மற்றும் கூகுள் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் நிறுவனங்கள் அரசுகளை விட மோசமாக நடந்து கொள்வதாக ரெலிகிராம் நிறுவுனர் பவேல் டுரோவ் தெரிவித்துள்ளார்.

உங்கள் தொலைபேசிகளில் நீங்கள் பார்க்கும் செய்திகளையும், நீங்கள் கூற நினைக்கும் செய்திகளையும் அப்பிள் மற்றும் கூகுள் நிறுவனங்கள் தமக்கு விரும்பியவாறு தடை செய்கின்றன. அவை மக்களின் கருத்து சுதந்திரத்திற்கு மிகவும் தடையாக உள்ளன

சில செய்திகளை தடை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்

*வெள்ளிக்கிழமை(19) அதிகாலை ஈரான் மீது இஸ்ரேலின் ஏவுகணை மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்காவின் படைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*




*எனினும் இந்த செய்தி எழுதும் வரையில் இஸ்ரேல் எதனையும் தெரிவிக்கவில்லை. ஈரானின் பாஹான் பகுதியில் உள்ள அணு உலை தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டபோதும், அவ்வாறு எதுவும் இடம் பெறவில்லை என ஈரான் தெரிவித்துள்ளது.*

*பஹான் பகுதிக்கு மேல் பறந்த 4 ஆளில்லாத தாக்குதல் விமானங்களை தாம் சுட்டு வீழ்த்தியுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. அதேசமயம், ஈராக் மற்றும் சிரியா பகுதியில் உள்ள படைத்துறை நிலைகள் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*பல விமான நிலையங்கள் தற்காலிகமாக முடப்பட்டன. 8 விமானங்கள் திருப்பிவிடப்பட்டன. எனினும் சில மணிநேரத்தின் பின்னர் நிலமை வழமைக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

## இனப்படுகொலை குற்றச்சாட்டை முன்வைக்க தயாராகும் கனடா?

*தமிழ் இனப் படுகொலை நினைவுச் சின்னமொன்றை கனடாவிலுள்ள நகர சபையொன்று நிர்மாணிப்பதற்கான முயற்சிகளை முறியடிப்பதற்கும் அந்நாட்டு அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டுகளை எதிர்ப்பதற்குமான விடயத்தில் இலங்கை இன்னும் தோல்வியில் உள்ளதாக தகவலறிந்த வட்டாரமொன்று தெரிவித்துள்ளது.*



*கனடாவில் உள்ள பிராம்ப்டன் நகர சபையானது தமிழ் இனப் படுகொலை நினைவிடத்திற்கான இறுதி வடிவமைப்பிற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. வெளிநாட்டு ஊடகத்தின் பிரகாரம், இந்த நினைவு சின்னத்தை அமைப்பதற்கு நகரசபை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உறுதியளித்திருந்தது.*

*இது இலங்கையின் உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களின் நினைவாக பிரமாலியா பகுதியில் உள்ள சிங்குகுசி பூங்காவில் 4.8 மீற்றர் உயரத்தில் அமைக்கப்படும் துருப்பிடிக்காத எகு நினைவுச் சின்ன*

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# 3வது உலகப் போருக்கான முன்னாயத்தக் காலத்தில் ஈழத்தமிழுரிறைமையை எவ்வாறு பாதுகாக்கலாம்?

இஸ்ரேயல் டமஸ்காசிலுள்ள ஈரானியத் தூதரகத்தைத் தாக்கியதன் எதிரொலியாக ஈரான் இஸ்ரேயலின் மேல் முந்நூறு ஏவுகணைகள் மற்றும் தன்னியக்க வானூர்திகளால் அடையாள வான்வெளி தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக இஸ்ரேயல் ஈரானில் அதன் அணுசத்தித் திட்டத்தின் மைய நகராகச் சீனாவின் தொழில்நுட்பப் பலத்துடன் இயங்கும் அணுசத்தி உற்பத்திக்குத் தேவையான யுரேனியத்தைப் பெறுவதற்கான யுரேனியம் புளோரைட்டைத் தயாரிக்கும் மூன்று அணுஉலைகளைக் கொண்ட இஷ்கான் நகரின் அனைத்துலக வானூர்தி நிலையத்திற்கும் ஈரானின் சீகாரி இராணுவத் தளத்திற்கும் அண்மையாக வலவனில்லா வானூர்திகளால் வெள்ளிக்கிழமை தாக்கியுள்ளது. அமெரிக்கச் செய்திகள் ஏவுகணைகளால் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை இஸ்ரேயல் நடத்தியதாகத் தெரிவிக்கின்றன. மூன்று பெருவெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும் வலவனில்லா வானூர்திகளை ஈரான் வெற்றிகரமாகச் சுட்டு விழுத்தியதாகத் தெரிவித்த ஈரானின் வான்வெளி முகவர் நிலையத்தின் பேச்சாளர் குசைன் டலிரின் அவர்கள் ஈரானின் அணுசத்தி நகருக்கு எந்தக் குறிப்பிடத்தக்கப் பாதிப்பும் ஏற்படவில்லையெனத் தெரிவித்துள்ளார். ஈரான் இதற்கான உடனடி எதிர்வினையெதையும் உடன் செய்யப்போவதில்லையென றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குக் கூறியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அமெரிக்காவுக்கு இஸ்ரேயல் இத்தாக்குதலுக்கு இரண்டு மணிநேரத்துக்கு முன்னதாகவே அறிவிப்பு செய்திருந்ததாகவும் ஆயினும் வாசிங்டன் மௌனத்தைக் கடைப்பிடித்துள்ளதெனவும் சில செய்திகள் வெளியாகின. அந்த வகையில் ஈரானின் ஏவுகணைத் தாக்குதல் பலத்தைக் குறைக்கவேண்டுமென்னும் அமெரிக்காவின் நீண்டகாலத் திட்டத்துடன் இதனை இணைத்துப் பார்க்கும் திறனாய்வுகளும் வெளியாகின. அமெரிக்கா மத்திய கிழக்கில் ஈராக்கின் சதாம் குசைனின் ஆட்சியையும், லிபியாவில் கடாபியின் ஆட்சியையும் ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சியையும் நிலைகுலைய வைத்த அதேபாணியில் இஸ்ரேலுக்கு ஆண்டொன்றுக்கு மூன்று பில்லியன் ஆயுதங்களை வழங்கி அதன்வழி ஈரானின் ஆட்சியை நிலைகுலைய வைக்கச் செயலாற்றுகிறது என்ற கருத்துக்களும் தலைதூக்கியுள்ளன.

எது எப்படியிருப்பினும் மூன்றாம் உலகப் போருக்கான அறிகுறிகளாகவே இஸ்ரேயலின் பலஸ்தீனம் மேலான இனஅழிப்பு போரையும், உக்ரேன் ரஸ்யப் போரையும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். நேட்டோ அமைப்பு ஏற்கனவே 20 வருடத்துள் ரஸ்யாவுடனான பெரும்போர் மூளும் என்னும் எதிர்பார்ப்புடன் 90000 படையினருடன் போர் ஒத்திகை பயிற்சிகளை மேமாதம் வரை நடாத்துவதற்கான செயற்திட்டத்தைத் தொடங்கியுள்ளது. அதில் 20000 படையினரை பிரித்தானியா இணைத்துள்ளது. அதே நேரத்தில் பிரித்தானியாவின் பாதுகாப்புச் செயலாளர் கிரான்ட் சாப்ஸ் அவர்கள் 5வருடங்களுள் ரஸ்யா, சீனா, ஈரான் வடகொரியாவுடன் பிரித்தானியாவுக்குப் போர் மூளுமென எச்சரித்துள்ளார். இவைகள் 2ம் உலகப் போருக்குப் பின்னரான காலம் என்பது முடிவடைந்து 3வது உலகப் போருக்கான ஆயத்தக்காலம் என்பது உலகில் ஆரம்பமாகியுள்ளது என்ற கருத்து தோன்ற வைத்துள்ளது. பிரித்தானிய மக்களிடை நடத்தப்பெற்ற கருத்துக் கணிப்பெடுப்புக்களும் இதனை உறுதி செய்கின்றன. 53வீதமானவர்கள் அடுத்த ஐந்து வருடத்துள் 3வது உலகப் போர் மூளும் என்ற கருத்தினையே கொண்டுள்ளனர். பிரித்தானியா இவ்வாண்டு இறுதியில் தேர்தலை எதிர்நோக்கும் நிலையில் 2019இல் கொன்சர்வேடிவ் கட்சியின் ஆதரவாளர்களாக இருந்தவர்களில் 57 வீதமானவர்களும் லேபர்கட்சியின் ஆதரவாளர்களில் 51 வீதமானவர்களும் போர் வருமென்ற கருத்தினையே கொண்டுள்ளனர். இதனால் இருகட்சிகளுமே பாதுகாப்புச் செலவுகளை அதிகரிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர். கருத்துக் கணிப்பில் 80 வீதமானவர்கள் ரஸ்யாவே பிரித்தானியாவின் பகைமையாகவும் 68 வீதமானவர்கள் ஈரானும் 64 வீதமானவர்கள் சீனாவும் 64வீதமானவர்கள் வடகொரியாவும் 27 வீதமானவர்கள் பாக்கிஸ்தானும் பகைமை நாடுகளாக அமையும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். அமெரிக்கா பிரித்தானிய நட்பு நாடாக அமையுமென 81 வீதமானவர்களும் பிரான்சென 68 வீதமானவர்களும் யேர்மனியென 63 வீதமானவர்களும் போலந்தென 59 வீதமானவர்களும் அவுஸ்திரேலியாவென 57 வீதமானவர்களும் இஸ்ரேயெலென38 வீதமானவர்களும் தென்கொரியாவென 35 வீதமானவர்களும் யப்பானெ 31 வீதமானவர்களும் துருக்கியென 18 வீதமானவர்களும் இந்தியாவென 25 வீதமானவர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர். இவை எல்லாம் 3ம் உலகப் போருக்கு மக்களின் மனநிலையை ஆயத்தம் செய்வதாகவே உள்ளன. இதனை மேலும் வலியுறுத்தக் கூடிய வகையில் பிரித்தானியாவின் பாதுகாப்புக் கொள்கை என்பது பெரிய போர் ஒன்றுக்கான பிரகடனத்தன்மை கொண்டதாக அமைகிறது எனக் எனக் கார்டியன் ஆங்கில நாளிதழின் பத்தி எழுத்தாளர் ஓவன் யோண்ஸ் எச்சரித்துள்ளார்.

தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பாதுகாப்பு செலவீனங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 வீதமாக அதிகரிக்கப்படும் என்னும் தொழிற்கட்சியின் தலைவரின் பிரகடனம் பிரித்தானியா ஆயுத இருப்புக்களை நிரம்பல் செய்வதிலும் வரவிருக்கும் முரண்பாடுகள் குறித்த அச்சத்தினை வளர்ப்பதிலும் அக்கறை காட்டும் என்பதை உறுதி செய்கிறது. ஆயினும் அமைதியை உருவாக்குவதில் இந்த ஆர்வத்தை பிரித்தானியா காட்டவில்லையென ஓவன் யோண்ஸ் கவலை தெரிவித்துள்ளார். அவர் ஆங்கில நாவலாசிரியர் ஜோர்ஜ் ஓர்வல் ‘அமைதியின் அமைச்சகம்’ என்ற தனது படைப்பில் குறிப்பிட்ட "பாதுகாப்பு" என்பது நடைமுறையில் "குற்றம்" என்ற சுலோகத்தையும் குறிப்பிட்டு பாதுகாப்புச் செலவீனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்படும் பொழுது அது நடைமுறையில் குற்றத்தை அஞ்சாது செய்வதற்கான தன்மையையும் தோற்றுவித்துவிடும் என்கிற ஜோர்ஜ் ஓர்வலின் அச்சத்தை மீள்நினைவுபடுத்தியுள்ளார். மேலும் பிரித்தானியாவின் மூத்த இராணுவத் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் சேர் பற்றிக் சான்டேர்ஸ் அவர்கள் பிரித்தானியா போருக்கு முன்னதான பரம்பரையினை ரஸ்யாவுடன் போரிடத் தயார் படுத்த வேண்டும் என்று கூறியதை இலக்கம் 10 டவுனிங் ஸ்ட்ரீட் மறுத்து கட்டாய இராணுவ சேவை முறைமைகள் தேவையில்லையென்று கூறிய போதிலும் படைகளின் மனிதவலுவையும் ஆயுதப்பலத்தையும் தொழில்நுட்பபலத்தையும் அதிகரிக்கும் திட்டங்களை வேகப்படுத்தச் செய்கிறது.

இவைகள் எல்லாமே உலக மக்கள் 3வது உலகப் போருக்கு முன்னதான மக்களாகத் தம்மை ஆயத்தம் செய்வதை வெளிப்படுத்தும் பொழுது ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலகளாவிய நிலையிலும் எப்படித் தங்களை இந்த 3வது உலகப் போருக்கு முன்னதான காலத்தை எதிர்கொள்ள ஆயத்தம் செய்யப் போகின்றார்கள் என்ற கேள்வியையே இலக்கு இவ்வாரச் சிந்தனையாக முன்வைக்கிறது. பிரித்தானிய காலனித்துவம் ஈழத்தமிழருக்கு அவர்களின் இறைமை வெளிப்படாதவாறு சிறுபான்மை இனம் என்ற அடையாளத்தை உலகின் முன் வழங்கியது. இந்திய மேலாண்மையும் அதன் அமெரிக்க மேற்குலகத் தோழமை நாடுகளும் இணைந்து இன்று ஈழத்தமிழரை சிறிலங்கா என்னும் சிங்கள பௌத்த நாட்டில் வாழும் சமுகம் என்னும் நிலைக்கு அடையாளப்படுத்தி வருகின்றன. இந்நிலையில் இனஅழிப்பு நோக்கிலான சிறிலங்காவின் பாதுகாப்போ அல்லது இறைமையழிப்பு நோக்கிலான இந்தியாவின் பாதுகாப்போ ஈழத்தமிழர்களுக்கு உலகம் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடியான காலகட்டத்தில் கிடைக்கப் போவதில்லை. அப்படியானால் புலம்பெயர் தமிழர்கள்தான் ஈழத்தமிழர்களை இந்த 3வது உலக போருக்கான ஆயத்தக் காலத்திலும் போர் மூளுமானால் அந்த இக்கட்டான காலத்திலும் பாதுகாப்பதற்கான அவசரகால முகாமைத்துவத்தை உருவாக்க வேண்டும். இதனை செய்வதற்கு புலம்பெயர் ஈழத்தமிழர்கள் அனைவரும் தங்கள் தனிப்பட்ட விருப்புவெறுப்புக்கள் குழநிலை அமைப்புநிலை போட்டித் தன்மைகளைத் தாண்டி ஒரு பொதுவான அமைப்பினைக் காலம் தாழ்த்தாது சிறிலங்கா ஜனாதிபதி தேர்தல் மாயையில் மயங்குவதை விடுத்து உருவாக்க வேண்டும் என்பதே இலக்கின் இவ்வாரப் பணிவன்பான வேண்டுகோளாக உள்ளது.

**ஆசிரியர்**

# தமிழ்ப் பொதுவேட்பாளர்?

அகிலன்

ஒக்ரோபரில் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்கள் எவராலும், 50 வீதமான வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பது முக்கிய கேள்வியாகியுள்ள நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. தென்னிலங்கை அரசியல் சக்திகள் பொது வேட்பாளர் என்ற விடயத்தை உன்னிப்பாக அவதானிப்பதற்கும் இது காரணமாக உள்ளது. ஆனால், தமிழ்த் தரப்பினர் இந்த விடயத்தை வெற்றிகரமாக முன்னகர்த்துவார்களா என்பதுதான் இன்றுள்ள பிரதான கேள்வி!



ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்ட பரபரப்பில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் உள்ள அதே வேளையில், தமிழ் அரசியல் கட்சிகள் பொது வேட்பாளர்கள் என்ற விடயத்தில் குழம்பிக் கொண்டுள்ளன. கடந்த காலங்களிலும் இரண்டு சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி வேட்பாளராக தமிழர்கள் களமிறங்கி இருந்தார்கள். ஆனால் அவர்களால் தமிழ் மக்களின் ஆதரவை போதிய அளவில் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இப்போது பிரதான தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை களத்தில் இறக்குவதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இது சாத்தியமா என்ற கேள்வி பல முனைகளில் முன்வைக்கப்படுகின்ற போதிலும் சிவில் அமைப்புகள் புத்திஜீவிகள் சிலரும் இதன் பின்னால் செயல்படுவதை அவதானிக்க முடிகின்றது. கொள்கையளவில் இதனைப் பலரும் ஏற்றுக்கொண்டாலும், நடைமுறையில் இது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்ற கேள்வியையும் அவர்கள் முன்வைக்கின்றார்கள்.



தமிழ் காங்கிரஸின் தலைவராக இருந்த குமார் பொன்னம்பலம் 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். தமிழ் மக்களுடைய வாக்குகள் தனக்கு கிடைக்கும் என அவர் எதிர்பார்த்த போதிலும் 1,13,881 வாக்குகளை மட்டுமே அவரால் பெற முடிந்தது. இதேபோல் இரண்டு தடவைகள் அதாவது 2010, 2015 ஆகிய ஆண்டுகளில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சிவாஜிலிங்கம் ஒவ்வொரு முறையும் 40 ஆயிரத்துக்கும் குறைவான வாக்குகளை மட்டுமே பெற்றார். இதன் மூலம் தமிழ் வேட்பாளர் என்ற கருத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

முன்னர் குமார் பொன்னம்பலமும், சிவாஜிலிங்கமும் களமிறங்கியதற்கும் இப் போது உள்ள நிலைமைக்கும் வேறுபாடுகள் உள்ளன. குறிப்பாக சிவாஜிலிங்கமும் குமார் பொன்னம்பலமும் களமிறங்கிய போது அவர்களது கட்சிகள் மட்டுமே அவர்களை ஆதரித்தன. சிவாஜிலிங்கத்திற்கு அந்த ஆதரவுகூட முழுமையாக இருக்கவில்லை. அவர்கள் மிகவும் குறைந்த வாக்குகளை பெறுவதற்கு அதுவும் காரணமாக இருந்திருக்கலாம். அதனால், அவர்கள் இருவருமே அந்தக் காலத்தில் கோமாளிகளாகவே பார்க்கப்பட்டனர். யதார்த்தத்துக்குப் புறம்பான ஒரு அரசியலைச் செய்பவர்களாகப் பார்க்கப்பட்டனர்.

இப்போது தமிழ் கட்சிகள் அனைத்தும் இணைந்து பொதுவான வேட்பாளர் ஒருவரை களம் இறக்க வேண்டும் என்று கருத்து முன்வைக்கப்படுவதால் அது சர்வதேசரீதியாக ராஜதந்திர கவனத்தை பெறும் என்ற ஒரு எதிர்பார்ப் பும் காணப்படுகின்றது. இவ்விடயத்தில் அனைத் துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து செயற்பட்டால் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும்!



இந்த இடத்தில் தான் முக்கியமான ஒரு பிரச்சனை இருக்கின்றது. ஐந்து கட்சிகள் இணைந்து உருவாக்கிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி பொது வேட்பாளர் என்ற கருத்தை முன்னிலைப்படுத்தி வருகின்றது. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் இந்த கருத்துடன் இணைந்து செல்கின்றது. இறந்த போதிலும் தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியாக இருக்கின்ற தமிழரசு கட்சி இந்த விடயத்தில் உத்தியோபூர்வமான முறையில் தன்னுடைய ஆதரவை வெளிப்படுத்தவில்லை. தமிழசுக்கட்சிக்குள் உருவாகி இருக்கும் தலைமைத் துவ போட்டியும் அந்த விவகாரம் இப்போது நீதிமன்றம் சென்றிருப்பது இந்த நிலைமைக்கு ஒரு காரணமாக கூறப்படுகின்றது.

இந்த விவகாரத்தில் தமிழ் அரசு கட்சியின் முக்கிய தலைவர்கள் முரண்பாடான கருத்துக்களை பகிரங்கமாக முன்வைக்கின்றனர். சுமந்திரன், சிவிகே சிவஞானம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் பொது வேட்பாளர் என்ற கருத்துக்கு எதிராக செயல்பட்டு வருகின்றார்கள். மறுபுறத்தில் தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவு செய்யப் பட்ட ஸ்ரீதரன் பொது வேட்பாளர் என்ற என்பதற்கு ஆதரவாக கருத்துகளை முன்வைத்து வருகின்றார். இரண்டாவது மட்டத்தில் உள்ள பலரும் ஆதரவா கவே இருக்கின்றார்கள்.

தமிழரசுகட்சிதமிழ் மக்களின்பிரதானமான கட்சியாக இருப்பதால் அதனுடைய ஆதரவை பெற்றுக் கொள்ளாமல் இந்த விவகாரத்தை முன்நகர்த்த முடியாது என்ற உண்மையை ஏனைய கட்சிகள் உணர்ந்து கொண்டிருப்பதாகவே தெரி கின்றது. ஆனால் தமிழரசு கட்சிக்குள் உருவாகி யிருக்கும் நெருக்கடி எப்போது முடிவுக்கு வரும் இந்த விவகாரத்தில் உறுதியான ஒரு நிலைப்பாட்டை தமிழரசு கட்சி எப்போது வெளிப் படுத்தும் என்பது கேள்விக்குறியாகவே இருக் கின்றது.

தமிழரசு கட்சியின் உறுதியான ஆதரவு இல்லாமல் இந்த விவகாரத்தை முன் நகர்த்தினால் கடந்த காலங்களில் குமார் பொன்னம்பலத்திற்கும் சிவாஜி லிங்கத்திற்கும் நடைபெற்றது போன்ற ஒரு நிலைமையை இவ்வாறு களம் இறக்கப்படும் தமிழ் பொது வேட்பாளருக்கும் ஏற்படலாம். சுமந்திரன் போன்றவர்கள் பொது வேட்பாளர் என்ற கருத்திற்கு எதிரான பிரச்சாரங்களையும் முன்வைக்கும் வாய்ப்புகள் உள்ளது. ஏற்கனவே ராஜபக்ஷக்களின் நிகழ்ச்சி நிரலின் படி தான் இந்த பொது வேட்பாளர் நிறுத்தப்படுகிறார் என சுமந்திரன் தெரிவித்திருந்தார்.



அதே வேளையில் ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்தை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்வைத்து வருகின்றது. பொது வேட்பாளர் என்பது யாரோ ஒருவரை வெற்றி பெற செய்வதற்கான சதி என்ற கருத்தை கஜேந்திரகுமார் முன்வைத்து வருகின்றார். அதை வேளையில் கஜேந்திரகுமாரின் தந்தை குமார் பொன்னம்பலம் 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிட்டார் என்பதும் கவனிக்கத்தக்கது.

கொள்கை ரீதியான முரண்பாடுகளுக்கு அப்பால் அரசியல் ரீதியான முரண்பாடுகள்தான் இங்கு மேலோங்கியிருக்கின்றது.

சிங்கள தலைவர்களுக்கு வாக்களித்து தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவ தில்லை என்பதையும் தமிழ் மக்களுடைய கோரிக்கை என்ன என்பதையும் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவதற்காக இவ்வாறு பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என தமிழ் கட்சிகள் தெரிவிக்கின்றன. அதே வேளையில் இவ்வாறு தமிழ் வேட்பாளர் ஒருவரை அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து களத்தில் இறக்கினால் அது தமிழ் மக்களுக்கு பேரம் பேசும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தேர்தல் களத்தில் ஜே.வி.பி. ஏற்படுத்தப் போகும் தாக்கம்

## ஆய்வாளர் யதீந்திரர் செவ்வி

**ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை ஜே.வி.பி. அதிகளவு வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதான வேட்பாளர்கள் எவரும் 50 வீதமான வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையை இது ஏற்படுத்திவிடலாம் எனக் கருதப்படுகின்றது. இது குறித்து உங்கள் பார்வை என்ன?**

**ஜனாதிபதித் தேர்தலை நோக்கி இலங்கை சென்றுகொண்டிருக்கும் நிலையில், அரசியலில் புதிய கூட்டணிகள், கட்சி தாவல்கள் ஆரம்பமாகியுள்ளது. அதேவேளையில், ஜே.வி.பி. இம்முறை கணிசமான தாக்கத்தை தேர்தல் களத்தில் கொடுக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவை குறித்து பத்திரிகையாளரும், அரசியல் ஆய்வாளருமான யதீந்திரா அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம் இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



ஜனாதிபதித் தேர்தல் குறித்து பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. உண்மையில் இந்தத் தேர்தலில் யார், யார் களமிறங்கப்போகின்றர்கள் என்பன எல்லாம் குழப்பகரமானதாகத்தான் இருக்கின்றது. மே மாதத்துக்குப் பின்னர் இவை குறித்து தெளிவாகத் தெரியக்கூடியதாக இருக்கும். ஆனால், இப்போது தெளிவாகத் தெரியப் போவது அநுரகுமார திஸாநாயக்க ஒரு பிரதான வேட்பாளராகப் போட்டியிடப் போகின்றார். அதில் சந்தேகம் இல்லை. அதேவேளையில், சஜத் பிரேமதாஸவும் போட்டியிடப்போகின்றார் என்ற நிலையில்தான் அவரது கருத்துக்களும் அமைந்திருக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் அவர் என்ன அடிப்படையில் போட்டியிடப் போகின்றார் என்பது இதுவரையில் தெளிவாகத் தெரியவில்லை. அவர் ஒரு பொது வேட்பாளராக நிற்பார் எனச் சொல்லப்படுகின்றது. மகிந்த ராஜபக்ஷவுக்கு சார்பான அணியில் நிற்பார் என்றும் செய்திகள் வெளிவருகின்றன. தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவையும் பெறக்கூடிய ஒருவரைத்தான் பொது வேட்பாளர் என்று சொல்ல முடியும். 2015 இல் அவ்வாறுதான் இடம்பெற்றது. அப்போது ராஜபக்ஷ எதிர்ப்பு அணியினர் அனைவரும் இணைந்து அவரை வெற்றிபெறச் செய்தனர். அவ்வாறான ஒரு சூழல் மீண்டும் ஏற்படக்கூடும் என்ற ஒரு கணிப்பும் இருக்கின்றது.



இவை எவ்வாறு இடம்பெறும் என்பதையிட்டு தெளிவாக – உறுதியாகச் சொல்லக்கூடிய ஒரு நிலை இல்லையென்றாலும், மேலே குறிப்பிட்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவார்கள் என்பது தெரிகின்றது. பொது வேட்பாளர் என்று சொல்லக்கூடிய வகையில் இரண்டு வேட்பாளர்கள்தான் இப்போது உள்ளார்கள். ஒருவர் ரணில் விக்கிரமசிங்க. மற்றவர் சஜித் பிரேமதாஸ. ஏனென்றால், இவர்கள்தான் தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் ஆதரவுடன் தேர்தலில் நிற்கக்கூடியவர்கள். இவ்வாறான ஒரு நிலையில் அனுரகுமார திஸாநாயக்க இல்லை. அவர் பொதுவாக இலங்கையை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்று கூறுகின்றாரே தவிர, ஏனைய மக்களுடைய பிரச்சினைகள் குறித்து எதுவும் பேசுவதில்லை. அந்த நிலையில், சிறுபான்மையின மக்கள் அவரை ஆதரிப்பார்களா என்பது கேள்விக்குறிதான்.



இந்த நிலையில்தான் ஜனாதிபதித் தேர்தல் களம் இப்போது சூடுபிடிக்கத் தொடங்குகின்றது. நிச்சயமாக இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறப்போவது யார் என்பது இப்போது எங்களுக்குத் தெரியாவிட்டாலும், இந்தப் போட்டிக்களம் ஒரு மும்முனைப் போட்டிக் களமாகவே தெரிகின்றது. அது ஒருவாறு இருமுனைப் போட்டியாக மாறினால் இந் 50 வீத பிரச்சினை உருவாகும் வாய்ப்பு இருக்காது. ஆனால், மும்முனைப் போட்டியென்றால், ஐம்பது வீதத்தை யாரும் பெறமுடியாத நிலை வரும்போது, இரண்டாவது நிலை வாக்கு எண்ணிக்கைக்குச் செல்ல வேண்டியிருக்கலாம்.

ஆனால், இவ்வாறு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலை நோக்குகின்ற போக்கு பொதுவாக மக்கள் மத்தியில் இல்லை. உங்களுடைய இரண்டாவது விருப்பு வாக்கை யாருக்கு அளிக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை கட்சிகள் முன்னெடுத்தால் மட்டுமே, மக்கள் அவ்வாறு வாக்களிப்பார்கள். எப்படியிருந்தாலும், இது ஒரு குழப்பகரமான தேர்தலாக அமையலாம்.

**ஜே.வி.பி. இந்தத் தேர்தலில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துவார்கள் என்று கணிப்புக்கள் சொல்கின்ற போதிலும், சிறுபான்மையின மக்களுடைய வாக்குகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் ஜே.வி.பி. போதிய அக்கறையைக் காட்டவில்லை. இதற்கு என்ன காரணம்?**

ஜே.வி.பி.யின் ஆரம்பகால வளர்ச்சிக்கும் இப்போது அவர்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்படும் விடயங்களுக்கும் இடையில் கணிசமான வேறுபாடுகள் உள்ளன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 4 வீதமான வாக்குகளைப் பெற்றவர்கள், திடீரென்று 50 வீதமான வாக்குகளைப் பெறக்கூடியவர்களாக இருப்பதாக கணிப்புக்கள் சொல்கின்றன. இந்தக் கணிப்புக்கள் தொடர்பாகவும் மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஆனால், ஏனைய பிரதான கட்சிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அச்சப்படும் அளவுக்கு ஜே.வி.பி.யின் செல்வாக்கு இருக்கின்றது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி அதிகாரத்தை நெருங்கிச் செல்லக்கூடிய ஒரு கட்சி என்ற வகையில் ஒரு பரிசோதனைக் களத்துக்குள் ஜே.வி.பி. செல்கின்றது. இந்தநிலையில் அவர்களுடைய பிரதான இலக்கு சிங்கள மக்களுடைய ஆதரவைப் பெறுவதுதான். பிரதான சிங்களக் கட்சிகளைப் போலவே அவர்களுடைய மனப்போக்கும் உள்ளது. இதனால், தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பற்றிப் பேசினால், அது சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்துவரும் தமது செல்வாக்கைப் பாதித்துவிடும். அல்லது எதிர்த் தரப்புக்கள் அதனைப் பயன்படுத்தி தமது பிரசாரங்களை முன்னெடுக்கலாம் என்ற அடிப்படையில்தான் அவர்கள் திட்டங்களை வகுப்பது போன்று தெரிகின்றது.

அதனால்தான் ஏனைய மக்களுடன் அவர்கள் சந்திப்புக்களை மேற்கொண்டாலும்கூட, எந்தவிதமான வாக்குறுதிகளையும் வழங்குபவர்களாகவோ அல்லது அவர்களுக்காக சில திட்டங்களை முன்வைப்பவர்களாகவோ அவர்கள் இல்லை. குறிப்பாக தமிழ் மக்கள் விடயத்தில் அவர்கள் மிகவும் நிதானமாக, இலங்கையர் என்ற நிலையை உருவாக்குவோம் எனப் பொதுவாகச் சொல்கின்றார்களே தவிர, தேசியப் பிரச்சினை ஒன்று இருப்பதை ஏற்றுக்கொள்பவர்களாகவோ, அதற்கான ஒரு தீர்வை வழங்க வேண்டும் என்பதில் அக்கறை இருப்பவர்களாகவோ எதையும் வெளிப்படையாகச் சொல்ல முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். அவ்வாறு சொன்னால், தென்னிலங்கையில்தமக்கு இருக்கும் செல்வாக்கை அது பாதித்துவிடும் என்ற அச்சத்திலிருந்துதான் அந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன. சிங்கள மக்களின் வாக்குகளைத் தக்கவைத்துக்கொள்ளல் என்ற விடயத்தில் ஜே.வி.பி.யும் ஏனைய கட்சிகளும் ஒத்த நிலைப்பாட்டைக் கொண்டவையாகத்தான் உள்ளன.

**பொதுஜன பெரமுனவும் தமது கட்சியின் சார்பில் ஒருவர் களமிறக்கப்படுவார் எனக் கூறியிருக்கின்றது. மகிந்த ராஜபக்ஷ கூட அண்மையில் இவ்வாறு தெரிவித்திருந்தார். அதற்கான வாய்ப்புக்கள் எவ்வாறு இருக்கின்றது?**

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# கிழக்கில் தமிழ்த்தேசியவாதம் உயிரோட்டமாக இருந்து வருகின்றது



**கிழக்கில் தமிழ்த்தேசியவாதம் என்பது உயிரோட்டமாக இங்கு இருந்து வருகின்றது. அதனை உடைத்து பேரினவாதம் கிழக்கில் ஊன்றுவதற்கான பல திரை மறைவு செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன. அந்த வகையில் தமிழ்த் தேசியத்தலைமைகளைக் கொலை செய்தல், பிரதேசவாதத்தினை விதைத்தல்,பதவி பண அரசியலை ஊக்குவித்தல், தேர்தல் மோசடிகள் செய்தல் இவ்வாறான சூழ்ச்சிகள் மூலமாக பேரினவாதம் பிரதேசவாதத்துடன் இணைந்து கிழக்கைக்கைப் பற்ற நினைப்பதுடன், தமிழ்த்தேசியவாத அரசியல்லை கிழக்கில் அழிக்க நினைக்கின்றது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.**

**'இலக்கு'வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார்.அவர் வழங்கிய செவ்வியின் முழு வடிவம்:-**

## கிழக்கின் அரசியல் சூழலை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

கிழக்கு மாகாணம் மூவின மக்களுடன் தொடர்புபட்டது. எனவே,இனத்துவம், இனவாதம் பிரதிபலிக்கப்பட்டு வருவது உண்மை. ஆனால், தமிழ்த்தேசியவாதம் என்பது உயிரோட்டமாகவும் இங்கு இருந்து வருகின்றது. அதனை உடைத்து பேரினவாதம் கிழக்கில் ஊன்றுவதற்கான பல திரை மறைவு செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன.

அந்த வகையில் தமிழ்த் தேசியத் தலைமைகளைக் கொலை செய்தல், பிரதேசவாதத் தினை விதைத்தல்,பதவி பண அரசியலை ஊக்குவித் தல்,புவனாய்வாளர்களால் குழப்புதல்,தேர்தல் மோசடிகள் செய்தல் இவ்வாறான சூழ்ச்சிகள் மூலமாக பேரினவாதம் பிரதேசவாதத்துடன் இணைந்து கிழக்கைக் கைப்பற்ற நினைப்பதுடன், தமிழத்தேசியவாத அரசியலை கிழக்கில் அழிக்க நினைக்கின்றது.



ஜனாதிபதித் தேர்தல் 2019 இல்,கோத்தா வென்றவுடன், பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கை, அரசியல் ரீதியாகக் கைப்பற்றுவதற்கு பல மலினமான மோசமான சூழ்ச்சிகள் இடம் பெற்றன. அதனால்,மொட்டானது கிழக்கில் தற்காலிக வெற்றியையும் அடைந்தது. கிழக்கில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குக் கிடைக்க வேண்டிய 2 அல்லது 3 ஆசனங்கள் இழக்கப்பட்டுள்ளன. ஆனால்,மொட்டுக் கட்சி வியாழேந்திரன், படகுக்கட்சி சந்திரகாந்தன், மொட்டுத் தோழர் கருணா போன்றவர்களால் தேர்தலின் போது கூறப்பட்ட சிறுவாக்குறுதிகள் கூட நிறைவேற்றப்படவில்லை. தாம் வென்றால் 3 நாட்களுக்குள் கல்முனை வடக்குப்பிரதேச செயலகப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று கிழக்கின் இருப்புவாதிகள் கூறினர்.

ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன.எதுவும் நடக்கவில்லை. சாதாரண மயிலத் தமடு மேய்ச்சல் தரைப் பிரச்சினை கூட இராசாங்க அமைச்சர்கள் இருவரால் தீர்க்க முடியவில்லை.

பேரினவாத ஒட்டுக்குழு இணக்க அரசியல் கிழக்கை ஆக்கிரமிப்பதற்கு அனுமதி அளிப்பதாக அமைந்துள்ளது.பேரினவாதத்திற்கு அடிவருடும் பிரதேசவாதிகள் பணத்தையும் பதவிகளையும் மட்டுமே அனுபவிக்கின்றனர்.

**மட்டு.நகரான்**

எனவே,தமிழ் மக்கள் கிழக்கில் இதனை அறிவதற்கு வாய்ப்புகள் உருவாகியுள்ளன. எனவே இனிவரும் காலத்தில் மோசடித்தேர்தல் தவிர்க்கப் படுமிடத்து, பேரினவாதமும், தோழமையான பிர தேச வாதமும் தோல்வியடைந்து விடும்.

## தற்போதைய தமிழ் தேசிய அரசியல் போக்கு எதிர்காலத்தில் தமிழர்களின் தீர்வுத்திட்டத்தில் எவ்வாறான பாதிப்பினை ஏற்படுத்தும்? இந்த அரசியல் போக்கில் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்?

சிங்கள பௌத்த பேரின அடிப்படைவாதம் 76 ஆண்டுகளாக இந்நாட்டை ஆட்சி செய்கின்றது. அந்த அதிகார வர்க்கம் தமிழர்களுக்கு எதனையும் கொடுக்க விரும்பவில்லை என்பதுதான் வரலாறு. அந்த அடிப்படைவாதம் தமது சுயநல தேவைக்காக தமிழர்களின் இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. விடுதலைப்புலிகள் மௌனித்த பின்னரும் புலிகள் மீள் எழுச்சி பெறுகின்றார்கள் என்று சிங்கள சமூகத்தினை பயங்காட்டி ஆட்சி செய்ய விரும்புகின்றது. இந்நிலையில், உள்நாட்டில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்பதே வரலாறாக உள்ளது.

எனவே,தமிழ்த்தேசியத்தளத்தில் இயங்கும்



அரசியல்வாதிகள் தீர்வு விடயத்தில் ஒன்றிணைந்து தமது தீர்வினை வடக்கு கிழக்கு மக்களாணை மூலமாகப் பெற்று அதனை சர்வதேச நாடுகள் சர்வதேச அமைப்புகள் மூலமாகப் பெறுவதே ஒரே வழியாகவுள்ளது. அதற்காகப் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதும் முதல்வழியாக அமையலாம்.ஆனால் வேட்பாளர் பொருத்தமானவராக அமைய வேண்டும்.

தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளை ஒரு புள்ளிக்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பு தமிழ்ப்புத்திஜீவிகளின் கையிலும் உள்ளது. மூத்த தலைவர்களின் கைகளிலும் உள்ளது. தமிழ்த் தேசியக் கட்சிகளிலுள்ள முரண்நிலை வாதிகளைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியதும் அவசிய மாகும்.

தமிழ்த்தேசியக்கட்சிகள் கொள்கை அளவில் இணையும் போது கிழக்கில் பாதிப்பு ஏற்படாது. பேரினவாதிகளுடன் ஒட்டிப் பிழைக் கும் பிழைப்புவாதிகள், பிரதேசவாதிகள் தமிழர் களுக்கு ஆபத்தானவர்கள் என்பதைத் தமிழர்கள் புரிய வேண்டும்.

## பொது வேட்பாளர் நிறுத்துவது குறித்து தமிழ் தேசிய அரசியலில் பேசப்படும் விடயங்களில் பின்புலமாக மகிந்த குடும்பம் உள்ளது என்ற கருத்தினை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

மகிந்த தரப்பு தமது தரப்பில வேட்பாளர் ஒருவரை நிறுத்துகின்ற விடயத்திலே திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டைப் பொருளாதார ரீதியில் வங்குரோத்துக்குத் தள்ளிய ராஜபக்சக்கள் அரசியலிலும் வங்குரோத்து அடைந்து விட்டனர். அவர்களிடம் இருந்து பலர் வேறு கட்சிகளுக்குத் தாவுகின்றனர். இந்நிலையில் தற்காப்பு அரசியலுக்கே திண்டாடும் மகிந்த தரப்பு, தமிழ்ப் பொது வேட்பாளர் பற்றிச் சிந்திக்க வாய்ப்புக்குறைவு அல்லது இல்லை.



கடந்த காலத்தில் தமிழர் ஒருவர் அவ் வாறு நிறுத்தப்பட்டதாக தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், பொது வேட் பாளருக்கு எதிரான தனது வாதத்தினை வலியுத்தவே இப்படியான கருத்தினை முன்வைத்துள்ளதாக நான் கருதுகின்றேன்.

## பொது வேட்பாளர் தொடர்பில் தமிழர்களின் நிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்று கருதுகின்றீர்கள்?

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மக்கள் நலனில் அக்கறை காட்டுங்கள்

ஹஸ்பர் ஏ ஹலீம்

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை நகர் பகுதி மிக முக்கியமானதாக காணப்படுகிறது .இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்டு கிழக்கின் முக்கிய இயற்கை துறை முகத்தை கொண்டும் காணப்படுகிறது .இதனால் அரசாங்கத்தின் அபிவிருத்தி என்ற போர்வையில் வேறு நாடுகளுக்கு திருகோணமலை துறை முகம் உட்பட பல இயற்கையான இடங்கள் விற்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.





இதன் மூலம் திருகோணமலையில் கடந்த காலங்களில் பல போராட்டங்கள் நடைபெற்றுள்ளதுடன் நடந்தும் வருகிறது இது தவிர மக்களின் பொருளாதார சுமையை குறைக்க பல போராட்டங்கள் வடகிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் இடம் பெற்றன இதன் ஒரு கட்டம் திருகோணமலை நகரில் இடம் பெற்றது. அரிசி விலையை குறைக்க கோரி திருகோணமலை நகர சபைக்கு முன்னால் *(09.04.2024)* அன்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் இடம் பெற்றது. குறித்த போராட்டத்தை வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர். பட்டினி சாவு எமக்கு வேண்டாம், இலங்கை அரசாங்கம் அரிசி விலையை குறைக்க வேண்டும் போன்ற வாசகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொருளாதார சுமையில் இருந்து மக்களை இந்த அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் பொருட்களுக்கான விலையை குறைக்க வேண்டும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் இதனை புரிந்து மக்களுக்காக செயற்பட்டு விலைகளை குறைக்க முன்வர வேண்டும் வாக்குகளுக்காக மாத்திரம் மக்களிடம் வராமல் மக்கள் பிரச்சினைகளை பார்க்க வேண்டும் எதிர் வரும் தேர்தல் ஜனாதிபதி பாராளுமன்ற தேர்தல் என உள்ளது.



டொலர் பெறுமதி அதிகரிக்கும் போது பொருட்களின் விலை அதிகரிக்கிறது டொலரின் பெறுமதி குறையும் போது ஏன் பொருட்களின் விலை குறைவதில்லை அரிசிக்கான நிர்ணய விலையை வகுத்து மக்களை காப்பாற்றுங்கள் எனவும் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர் வயோதிபத் தாய் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது திருகோணமலை நகர பகுதியில் இது தொடர்பான துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டு வாசகங்களும் பல இடங்களில் ஒட்டப்பட்டன.



இதில் நூற்றுக்கணக்கான பெண்கள் என பலரும் கலந்து கொண்டனர். இவ்வாறாக பல போராட்டங்கள் நடை பெற்றுள்ளன எது எவ்வாறாக இருந்தாலும் அபிவிருத்தி என்ற போர்வையில் பாமர மக்கள் பாதிக்கப்படக் கூடாது .துறை முக அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் என கப்பல் துறை பகுதியில் பல காணிகளில் மக்களுடைய தனியார் காணிக்குள் பெயர் பலகை போடப்பட்டுள்ளது இது தொடர்பில் அங்கு அடிக்கடி துறை முக அதிகார சபை ஊழியர்கள் செல்கிறார்கள் இதன் மூலம் மக்களுக்கு அச்ச நிலை ஏற்படுகிறது.

திருகோணமலை நகரில் உள்ள மணிக் கூட்டு கோபுர சந்தியில் மக்கள் போராட்ட இயக்கத்தினர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை அண்மையில் நடாத்தினர்

இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் பிரதேசத்தை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர். திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற உள்ள அந்நிய சக்திகளின் தலையீடு மற்றும் திருகோணமலை நகரில் உள்ள சில பிரதேசங்கள் வேறு நாடுகளுக்கு குறிப்பாக இந்தியாவுக்கு விற்பனை செய்வதை எதிர்க்கும் முகமாக பிரதானமாக உணவு தவிர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

மேலும் பொதுமக்களுக்கு இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தை விளக்கப்படுத்தும் நோக்கமாகவும் நகரில் உள்ள பிரதேசங்கள் வேறு நாடுகளுக்கு விற்பனைசெய்வதை தவிர்க்க அல்லது தடுக்கும் முகமாக அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தை கொண்டு துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

இதன் போது குறித்த அமைப்பின் செயற்குழு உறுப்பினர் இவ்வாறு கருத்து தெரிவித்தார். எமது வளங்களை இந்தியாவுக்கு தாரை வார்க்கும் ரணில் ராஜபக்ச அரசாங்கம் இதனை ஏற்க முடியாது மக்களின் சொத்துக்களை வளங்களை சூறையாட முனைகின்றனர் இதனை நிறுத்த வேண்டும் . நாட்டின் முக்கிய வளங்களான துறை முகங்கள் விமான நிலையம் போன்றன தாரை வார்க்கப்படுகிறது திருகோணமலையில் முக்கிய கரையோர பிரதேசம் தொடக்கம் கப்பல் துறை வரையான பகுதி அபகரிக்கப்படுகிறது இதனை நிறுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் .இலங்கை நாடு சர்வதேச நாணய நிதியத்தின் பிடியில் சிக்கி தவிக்கிறது இதற்கு எதிராக போராடியவர்களை கைது செய்துள்ளனர் மக்களுக்கு எதிரான ஜனநாயகத்துக்கு எதிரான சட்டங்களை கொண்டு வந்து மக்களை அடக்கி ஒடுக்க முனைகின்றனர் என்றார்.



எனவே தான் கிழக்கிலங்கையின் முக்கிய ஒரு நகரமாக திருகோணமலை காணப்படுகிறது பல சுற்றுலா தளங்களையும் இயற்கையாக கொண்டுள்ளது. எதிர்காலத்தில் மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அபிவிருத்திகள் இடம் பெறவேண்டும் அபிவிருத்திக்காக மக்களுடைய தனியார் காணிகளை பெற அரசாங்கம் முயற்சிக்க கூடாது என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

• • •

# நிலக் கூட்டுரிமை கோரிக்கையை இல்லாது செய்வதற்கான உத்தி

# பலஸ்தீனமும் முள்ளிவாய்க்காலும்

பாகம் 2

——— எழில்

நிலக் கூட்டுரிமை கோரிக்கையை இல்லாது செய்வதற்கான உத்தியாகத்தான் வலிந்து குடியிருப்பது *(settler coloniism)*, வடக்கு-கிழக்கை சிங்கள-பௌத்த மயமாக்குவதோடு இராணுவ மயப்படுத்துவதும் அவசியமாக்கப்படுகின்றது. கூட்டு நில உரிமைக் கோரிக்கையை “வாக்களிக்கப்பட்ட நாடு” என்ற சொல்லாடல்களுக்கூடாக பூசி மெழுகுதல் இலகுவானது. ஈழத்தமிழ், பலஸ்தீன, இரு தளங்களிலும் “வாக்களிக்கப்பட்ட நாட்டை மீட்டெடுத்தல்” சொல்லாடல்களுக்கூடாக மதச் சாயத்தைப் பூசி பேரரசுக் கட்டமைப்பு நலன்களை முன்னெடுத்தல் இலகுவான உத்தியாகப் பயன்படுத்தப்படுகின்றது. சிறிலங்காவில் புத்தர் வாக்களித்த தேசத்தை மீட்டெடுத்தல், பலஸ்தீனத்தில்யாவே வாக்களித்த தேசத்தை மீட்டெடுத்தல்.





வாக்களிக்கப்பட்ட தேசத்தை மீட்டெடுத்தல் சொல்லாடல் 18ம் 19ம் நூற்றாண்டுகளில் சிறிலங்காவிலும் பலஸ்தீனத்திலும் காலனித்துவத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட காலனித்துவ உத்தி, காலனித்துவ மேலாண்மையை தக்க வைப்பதற்காக. நிலம் என்ற கருத்தியல் பூகோள வெளியை மட்டும் குறிப்பிடவில்லை. ஏகாதிபத்தியத்தில் பேரரசுக்கட்டமைப்புக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலம் என்பது புவிசார் அரசியலில் மிக முக்கியமானது. வடக்குகிழக்கின், பலஸ்தீனத்தின் கேந்திர முக்கியத்துவம் புவிசார் அரசியலில் மிக கணிசமான செல்வாக்குச் செலுத்துகின்றது.

கேந்திர முக்கியத்துவம் சார்ந்த புவியியல் வெளிகளை கையகப்படுத்தி கட்டுப்படுத்தல், இங்கு நிலம் என்று குறிப்பிடுவது வெறும் நிலத்தை மட்டும் குறிப்பிடவில்லை, கடல் வெளியையும் சேர்த்தே குறிப்பிடுகின்றேன், வல்லாதிக்க முகாமைத்துவத்திற்கு அவசியமானது. பலஸ்தீனம், மத்திய கிழக்கில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் தெற்காசியாவில்/ஆசியாவில் வடக்கு-கிழக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கின்றது, திருகோணமலை துறைமுகம் உள்ளடங்கலாக. தமிழினப் படுகொலையிலும், பலஸ்தீனப் படுகொலையிலும் இனப்படுகொலை ஒரு வரலாற்று செயன்முறையாக கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. சிறிலங்காவில் 1815 கண்டி சாசனத்திலிருந்தும், பலஸ்தீனப்படுகொலை நக்பா 1948ல் இருந்தும் ஆரம்பமாகின்றது. இவ்விரு இனப்படுகொலைகளுக்கான உத்திகள் அரச இயந்திரத்தினூடாக நிறுவனமயப் படுத்தப்பட்டிருப்பதோடு, சாதாரணமயமாக்கப்பட்டுள்ளது. இதனால் அசாதாரண இயங்குநெறி மக்களுக்கு சாதாரணமாக தென்படுகின்றது. இது ஒரு பண்பாடாகவே மாறி விட்டுள்ளது எனக் கூறினால் மிகையாகாது என நினைக்கின்றேன்.



தமிழ்த்தேசிய நம்பிக்கையைச் சிதைத்தல் ஆயர் இராயப்பு ஜோசப்பின் இனப்படுகொலைக்கான நீதிவேண்டிய கோரிக்கை 2009ற்கு பின்னரான அரசியல் வரலாற்றுச் சூழலில் மிக அவசியமானது. தமிழ்த் தேசிய நம்பிக்கை விழுமியங்களை சிதைப்பதற்கான முயற்சிகள், பல தசாப்தங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், 2009ற்குப் பின்னர் அதை ஒரு உளவியற் போராகவே சிறிலங்கா அரசு மிக வினைத்திறனோடு முன்னெடுத்திருந்தது. மிக அண்மையில் யாழில் ஒரு பாடசாலையில் நடந்த விளையாட்டுப்போட்டியில் காட்சிப்படுத்தப்பட்ட பூ கார்த்திகைப்பூவா? காந்தள் பூவா? என்ற விடயம்.




மாணவர்கள் அதை காந்தள் பூ என்றும் தாம் காவல்துறை குறிப்பிடும் கார்த்திகைப் பூவை வைக்கவில்லை என்பதும்;, அதை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் விசாரணையும் தமிழ்த் தேசிய நம்பிக்கையைச் சிதைத்தலின் மிக அண்மைய உதாரணமாகும். கார்த்திகைப் பூ தேசிய பூவாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அது தேசத்தின் குறியீடாக இருக்கின்றது. மீண்டும் நான் போர் நடத்தப்பட்ட புவியியல் வெளியைப் பற்றிய பொருள் விளக்கத்திற்கு செல்ல விரும்புகின்றேன். போர் அரங்கேற்றப்படுவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட களம் இரு இனப்படுகொலைகளிலுமே கடலை அண்டிய பிரதேசம். போர் வலயத்திற்குள் அகப்பட்ட மக்களுக்கு வெளியேறுவதற்கான அல்லது தப்பிப்பதற்கான தெரிவைக் கொடுக்காது ஓரங்கட்டுதல் என்பது, அடக்கப்பட்ட மக்களுடைய விடுதலைக்கான போரின் நம்பிக்கையை சிதைத்தல் ஆகும். எவ்வாறெனில் அடக்கப்பட்ட மக்களுக்காக உருவான/உருவாக்கப்பட்ட விடுதலைப் போராளிகளின் இயலாத்தன்மையில் மூலதனமிட்டு, விடுதலை வீரர்கள் தங்கள் சொந்த மக்களையே காப்பாற்ற முடியாதவர்களாய், உணவு கொடுக்க முடியாதவர்களாய், மருத்துவ வசதிகளை பெற்றுக்கொடுக்க முடியாதவர்களாய், ஒட்டுமொத்தத்தில் அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுக்க முடியாதவர்களாய் காட்டுவதன் மூலம், விடுதலை வேண்டிப் போராடுபவர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை சிக்கலுக்குட்படுத்துவதோடு, அவ் நம்பிக்கையை கட்டுடைப்பதுமாகும்.

நம்பிக்கைக் கட்டுடைப்பில் மிக மோசமான பாதிப்பை கொண்டுவரக்கூடியது, மக்கள் விடுதலைக்காக போராடுகின்ற கூட்டு நம்பிக்கையை உடைப்பதாகும். அடக்குமுறைக் குட்பட்ட சமூகம், அடக்குமுறைக்கு எதிராக போராடுவதற்கு கூட்டு நம்பிக்கை அவசியமாகின்றது. அந்த கூட்டு நம்பிக்கையே அவர்களின் போராட்ட இயங்குதளத்தை தக்க வைத்துக் கொள்ளும். கூட்டு நம்பிக்கையில் இருந்து தான் கூட்டுப் பிரதிநிதித்துவப்படுத்தல் உருவாகின்றது. கூட்டு பிரதிநிதித்துவப்படுத்தலில் கூட்டு முகவராண்மை*(collective agency)* தங்கியிருக்கின்றது. கூட்டு முகவராண்மையை அடக்குமுறைத் தளத்திலிருந்து வெளியகற்றல் பேரரசுக் கட்டமைப்புக்கு இன்றியமையாதது. அடக்குமுறைக்கு எதிராய் போராடும் மக்களிடமிருந்து கூட்டு விடுதலை முகவராண்மையை இல்லாது ஒழித்தல் மூலம் தமிழினத்திற்கான விடுதலை கொடுப்பவர்களாக, தெற்கிலிருந்தும், வேறு நாடுகளிலிருந்தும் வெள்ளை மீட்பர்களை இறக்குமதி செய்தல். இதனூடாக விடுதலை மையப்புள்ளியை களத்திலிருந்து அகற்றுதல்.



பிரதிநிதித்துவப்படுத்தல், பின்காலனித்துவ, பெண்ணியற் கற்கை திறனாய்வுகளில் மிக முக்கியமான கருத்தியலாக கொள்ளப்படுகின்றது, ஒரு சமூகத்தின் வலுவாக்கற் பயணத்தில் அடக்குமுறைக்குட்பட்ட சமூகத்தின் முகவராண்மைத் தன்மையை அகற்றுதல் -

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# மகாத்மாவின் அகிம்சைப் போராட்டத்திற்குச் சவாலாக அமைந்த அன்னை பூபதி ..!

—— வல்வை ந.அனந்தராஜ்

இந்திய அரசின் அடாவடித்தனங்களுக்கு எதிராக இரண்டு சாதாரண அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நீரை மட்டுமே அருந்தி, 31 நாட்கள் ஒரு துண்டு உணவு கூட அருந்தாது நோன்பிருந்து, சாவடைந்த அன்னை பூபதியின் நினைவுநாளான இன்றைய நாள் "தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாள்" என்று உலகம் முழுவதும் நினைவுகூரப்படுகின்றது.

மட்டக்களப்பு கிரானில், 1932 இல் பிறந்த கணபதிப்பிள்ளை பூபதியம்மா, இந்திய இராணுவம் தமிழீழ தாயகத்தில் நிலைகொண்டிருந்த காலப் பகுதியில், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளராகத் தீரமுடன் இயங்கி வந்ததால், மட்டக்களப்பு மாவட்டம் எங்கும் அவரது பெயர் புகழ்பெற்று விளங்கியது.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையில் பாரிய யுத்தம் நடந்து கொண்டிருந்த காலப் பகுதியில் இந்திய அரசுக்கும், இந்திய இராணுவத்தினருக்கும் எதிராக வடக்குக் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் சாத்வீகமான போராட்டங்கள் நடைபெற்றுக் கொணடிருந்தன.

தமிழ் மக்களுக்கு எதிராக, இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள், படுகொலைகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக மட்டக்களப்புத் தமிழ் மக்கள் திரண்டெழுந்தபொழுது, பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அன்னையர் முன்னணி தோற்றம் பெற்றது. அந்தவகையில் தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுககக்கூடிய பாரிய விருட்சமாக அன்னையர் முன்னணி வளர்ந்து வந்ததைக் கண்ட இந்திய இராணுவத் தளபதிகள் அந்த அமைப்பைத் தடைசெய்வதற்கும், அதில் செயற்பட்டுக் கொண்டிருந்த பெண்களைக் கடத்திக் கொண்டு செல்வதற்கும் பல முயற்சிகளை எடுத்துவந்தனர்.

இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் வகையில், பலமுனைகளில் அறவழிப் போராட்டங்களை நடத்துவதற்கு மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி தீர்மானித்தது. இந்த அறவழிப் போராட்டத்தை நியாயப்படுத்தும் வகையில் அவர்கள் இந்திய அரசுக்கு இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து, இந்திய அரசுக்கெதிராக உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

இவை இரண்டுமே சாதாரண மனிதாபிமானம் மிக்க கோரிக்கைகளாகவே இருந்ததாகச் சர்வதேச அமைப்புகளே அந்தநேரம் சுட்டிக் காட்டியிருந்தன. அதில், ஆகக் குறைந்த கோரிககைகளாக,

***1. இந்திய அரசு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்டு வரும் இனப்படுகொலைகளை நிறுத்துவதற்கான யோசனையாக, தமிழீழ விடுதலைப் புலிகளுடன், உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.***

***2. இந்திய இராணுவத்தின் கோரப்பிடியில் இருந்தும் தமிழ் மக்களைக் காக்கும் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரே ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும்.***




இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து சாகும் வரையான உண்ணாநிலைப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகப் பகிரங்கமாக அறிவித்ததைத் தொடர்ந்து, இந்தப் போராட்டத்தில் குதிப்பதற்காக பல நூற்றுக் கணக்கான பெண்கள் முன்வந்தனர். இவ்வளவு பெருந்தொகையான பெண்கள் அறவழிப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக வந்ததைக் கண்டதும், அன்னையர் முன்னணியினரின் போராட்ட உத்வேகம் மேலும் அதிகரித்தது. இந்திய இராணுவத்தினரும், அவர்களுடன் சேர்ந்து செயற்படும் ஒட்டுக்குழுக்களின் கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இவ்வளவு பெண்கள் துணிவுடன் களத்தில் இறங்கியதால் இதற்கான சரியான முடிவை எடுக்க முடியாத நிலையில் இருந்த அன்னையர் முன்னணி இறுதியில் குலுக்கல் முறையில் யாராவது ஒருவரைத் தெரிவுசெய்து சாத்வீகப் போராட்டக் களத்தில் இறக்குவது என்று முடிவெடுத்தது.

இந்தத் தெரிவின் மூலம் முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார். அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட அன்னம்மா டேவிட் அவர்கள் 1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் நாள் அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தார். ஆனால் அவரது உண்ணா நோன்புப் போராட்த்தைக் கண்டு அச்சமடைந்த இந்தியப் படையினர் உண்ணாவிரத மேடையில் இருந்த அன்னம்மா டேவிட் அவர்களைத் திடீரெனக் கடத்திச் சென்றதால், அவரால் தனது போராட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. அன்னையர் முன்னணியினரின் முதலாவது சாத்வீக முயற்சியே தோல்வியைத் தழுவியபோதும், அன்னையர் முன்னணியினர் தொடர்ந்தும் தமது முயற்சியை முன்னெடுத்தனர்.

இந்தநிலையில்தான் பூபதியம்மாள் இந்திய இராணுவத்தினருக்கு எதிராகவும், இந்திய அரசுக்கு எதிராகவும் உண்ணாநிலைப் போராட்டத்தை 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி நீரை மட்டுமே அருந்தி, சாகும் வரையான உண்ணா நோன்பினை ஆரம்பித்தார். அன்னம்மா டேவிட் அவர்களுக்கு எதிராக இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரம் பூபதி அம்மாளுக்கும் நேர்ந்துவிடக் கூடாது என்பதில் முன்னெச்சரிக்கையாகச் செயற்பட்டதுடன், பின் வரும் கோரிக்கைகளையும் முன்வைத்தார்.


"நான் எனது சுயவிருப்பின் பேரில் உண்ணா விரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது" எனக் கடிதம் எழுதி வைத்துவிட்டே சாகும் வரையான உண்ணா நோன்பினை ஆரம்பித்தார். இவர் நீர் மட்டும் அருந்தி சாகும்வரையான உண்ணாநோன்பு இருக்கத் தொடங்கியதும், இடையிடையே பல தடவைகள் தடங்கல்களை இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டனர். அவரையும் கடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அன்னை பூபதி இருந்த மேடையைச் சுற்றிவர ஆயிரக் கணக்கான பெண்கள் சூழ்ந்து நின்றதால், இந்தியப் படையினரின் முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனால் உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பத்துப் பிள்ளைகளில் சிலரையும், இந்திய இராணுவம் கைதுசெய்தது. இந்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அன்னை பூபதி உறுதியாக இருந்ததால், அவரது சாத்வீகமான போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவரால் முன்வைக்கப்பட்ட இரண்டு அம்சக் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றினால், தான் சாகும் வரையான உண்ணாநிலைப் போரட்டத்தை நிறுத்துவதாக இந்திய அரசுக்கு அறிவித்தபோதும், அன்னையர் முன்னணியினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை உதாசீனம் செய்த இந்திய அரசு, அன்னை பூபதியை சாவடையச் செய்வதிலேயே குறியாக இருந்ததால், அவர் உண்ணாநோன்பினை ஆரம்பித்து, சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று மட்டக்களப்பு மாநகரின் மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் உணவே அருந்தாது உயிர் நீத்தார். அவரது உயிர் பிரிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதுடன் வானமே பிளந்து வீழ்வது போல் ஓவென்ற அழுகுரல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

உண்ணாநோன்பு, உப்பு சத்தியாக்கிரகம், அந்நியரின் உணவுப் பொருட்களையும், ஆடைகளையும் நிராகரித்தல் போன்ற சாத்வீகமான போராட்ட வடிவங்களை உலகுக்குக் கற்றுக் கொடுத்த இந்தியாவின் முகத்திரை அன்னை பூபதியின் சாவின் பின்னர் மீண்டும் கிழித்தெறியப்பட்டது.

பிரித்தானிய அரசுக்கு எதிராக இந்தியாவுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக பல சந்தர்ப்பங்களில் உண்ணா நோன்பினை மேற்கொண்ட பொழுது, ஜனநாயக ரீதியில் அப்போது செயற்பட்ட பிரித்தானிய அரசு காந்தியைச் சாக விடாமல் காப்பாற்றுவதற்காக ஒவ்வொரு தடவையும் காந்தியின் கோரிககைகளை ஏற்று உடனடியாகவே நடைமுறைப்படுத்தித் தன்னை உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இனங் காட்டிய பிரித்தானிய அரசின் வழியைக் கூட இந்திய அரசு பின்பற்றாதது எல்லோருக்குமே ஏமாற்றத்தைத் தந்தது.

ஆனால் அகிம்சையை உலகுக்குப் போதித்த இந்தியாவின் பிதாமகனாகக் கணிக்கப்படும் காந்தியடிகள் சாகாமலேயே உண்ணா நோன்பு இருந்து மகாத்மா என்று அழைக்கப்படும் நிலையில் சாதாரண நிறைவேற்றக்கூடிய கோரிக்கைகளை முன்வைத்து நீர்கூட அருந்தாது பன்னிரு நாட்களில் உலகமே பார்த்திருக்கசாவடைந்ததியாகிதிலீபனை அல்லது நீரை மட்டுமெ அருந்தி, 30 நாட்களில் சாவடைந்த அன்னை பூபதியின் மரணம், இந்திய அரசுக்குமட்டுமல்லாது, தனது சாத்வீகமான போராட்ட வடிவங்களினால் உலகையே திரும்பிப் பார்க்க வைத்த மகாத்மா காந்தி அடிகளுக்குமே பெரும் சவாலாக அமைந்திருக்கின்றது.

• • •





# ஒருவிரல் புரட்சி

துரைசாமி நடராஜா

இலங்கையின் பாராளுமன்ற தேர்தல் முறையில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஸவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. இந்நிலையில் புதிய தேர்தல் முறை முன்வைக்கப்படுமிடத்து அது மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்திற்கு குந்தகம் ஏற்படாத வகையில் அமைய வேண்டுமென புத்திஜீவிகளும் சிவில் அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்து வருகின்றன.




தேர்தல் என்பது ஒரு நாட்டில் மக்கள் பொதுவாழ்வில் பதவிகளை நிர்வகிப்பதற்காக ஒரு 'தனிநபரை தேர்ந்தெடுக்க முடிவெடுக்கும் செயல்முறை' என்னும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையாகும். தேர்தல்கள் என்பது 17 ஆம் நூற்றாண்டு தொடங்கி தற்கால பிரதிநிதித்துவ குடியாட்சி வரை வழக்கமான ஒரு செயற்பாடாக இருந்து வருகின்றன. ஜனநாயகம் உலகில் முக்கியத்துவம் மிக்க ஆட்சிமுறையின் கருதப்படுகின்றது.'

மக்களுடைய மக்களுக்கான அரசாங்கமே ஜனநாயகம்' என்கிறார் அறிஞர் தோமஸ் கூப்பர். இதேவேளை 'மக்களுக்காக ஆக்கப்பட்ட, மக்களினால் ஆக்கப்பட்ட, மக்களுக்கு பதில் சொல்லக்கூடிய, மக்கள் அரசு' என்று ஜனநாயகத்தை வெப்ஸ்டர் வரைவிலக்கணம் செய்கின்றார். அறிஞர்களான தியாடோ பார்க்கர், லிங்கன் உள்ளிட்ட பலரும் ஜனநாயகம் குறித்த தமது வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். இந்த வகையில் ஒரு நாட்டில் ஜனநாயகம் சிறப்பிடம் பெறுவதற்கு தேர்தல்கள் உந்துசக்தியாக விளங்குகின்றன.

மனித சமுதாயம் கடந்துவந்த அரசியல் அமைப்புக்களில் ஆகச்சிறந்தது ஜனநாயக மாகும். உலகின் பல நாடுகளும், உலக மக்களும் ஜனநாயக ஆட்சியையே விரும்புகின்றனர். இந்த ஜனநாயக நாடுகளின் தலையெழுத்தை தீர்மானிப்பது தேர்தலாகும். ஒரு நாட்டில் ஜனநாயகம் சிறப்பாக செயற்பட வேண்டுமெனில் அதில் தேர்தல்களுக்கு முக்கிய பங்களிப்பு உண்டு. ஒரு ஜனநாயக சமூகம் என்பது தேர்தல் மூலமே வரையறுக்கப்படுவது என்ற ஆழமான ஒரு நம்பிக்கை நிலவுகின்றது. உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடாக இந்தியா விளங்குகின்றது.

தேர்தலின் மூலமாக தாம் விரும்பிய உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அல்லது அவர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்படுகின்றது. ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குப் பின்னர் ஆட்சியாளர்களும், அரசாங்கமும் மாற்றியமைக்கப்படுவது ஜனநாயக வழக்கமாகும். இதற்காகவே தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. ஜனநாயகத்தை நிலைநாட்ட தேர்தல்கள் மிகமிக அவசியமாகும். தேர்தல்கள் மூலம் சர்வாதிகாரம், குடும்ப ஆட்சி, ஊழல் நிறைந்த ஆட்சி என்பவற்றுக்கு முற்றுப்புள்ளிவைத்து புதிய அரசாங்கத்தை உருவாக்கும் நிலைமை ஏற்படலாம். இந்த வகையில் 'ஒரு விரல் புரட்சி' நாட்டில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படவும் அடிப்படையாக அமையும் என்பதனை மறுப்பதற்கில்லை.

### அற்ப சலுகைகள் வேண்டாம்

சிவில் உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள் என்று உரிமைகளை வகைப்படுத்துவார்கள். இவற்றுள் வாக்களிக்கும் உரிமை, தேர்தல்களில் போட்டியிடும் உரிமை, பதவியேற்கும் உரிமை, மனுச்செய்யும் உரிமை என்பன அரசியல் உரிமையின் பாற்படும். இத்தகைய அரசியல் உரிமைகளுள் வாக்களிக்கும் உரிமை என்பது மிகவும் இன்றியமையாததாகும்.




இவ்வாக்குரிமையை வாக்காளர்கள் சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும். அற்ப சலுகைகளுக்காக வாக்குரிமையை யாரும் விட்டுக் கொடுக்கக் கூடாது. ஒரு நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தல்கள் நம்பகத்தன்மையுடன் இடம்பெறுதல் வேண்டும். இதுவே பலரினதும் எதிர்பார்ப்பாகும்.

மக்கள் தமது பிரதிநிதிகளை அல்லது ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கும் வழிமுறை அல்லது தேர்தல் முறையே பிரதிநிதித்துவ முறை எனப்படுகின்றது. கோட்பாட்டு அடிப்படையில் இன்றுவரை மக்கள் தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளாக மூன்று வகையான பிரதிநிதித்துவ முறைகள் காணப்படுவதாக புத்திஜீவிகள் வலியுறுத்துகின்றனர். இனவாரிப் பிரதிநித்துவ முறை அல்லது சமூகவாரி பிரதிநித்துவ முறை, பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அல்லது தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறை, விகிதாசார பிரதிநிதித்துவ முறை என்பன அவை மூன்றுமாகும். இனரீதியில் அல்லது சமூக ரீதியில் மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வழிமுறை இனவாரிப் பிரதிநிதித்துவ முறையாகும். இலங்கையில் பாராளுமன்ற ஆட்சிமுறை அறிமுகம் செய்யப்பட்ட காலப் பகுதியில் அதாவது 1833 ம் ஆண்டு கோல்புறூக் யாப்பின் கீழ் பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் வழிமுறைகளாக இனவாரி பிரதிநிதித்துவ முறையே பின்பற்றப்பட்டமை தெரிந்ததேயாகும்.

1928 ம் ஆண்டில் தமது விதந்துரைகளை முன்வைத்த டொனமூர் ஆணைக்குழுவினர் இனரீதியான பிரதிநிதித்துவத்தை ஒழிக்குமாறு குறிப்பிட்டிருந்தனர். மேலும் 'இனவாரிப் பிரதிநிதித்துவம் இனவேறுபாடுகளை குறைப்பதற்கு பதிலாக அவற்றை அதிகரிக்கச் செய்துள்ளதோடு, எப்போதும் தீவிரமானதாக விளங்கும் சாதி வேறுபாடுகளைப் பொறுத்து, அதன் உணர்ச்சிவசப்பட வைக்கும் வேண்டுகோள்கள் கடந்த காலங்களில் மிகவும் சிறிதளவுதான் குறைந்துள்ளது' என்றும் தெரிவித்திருந்தனர்.

### விகிதாசார தேர்தல் முறை

இலங்கையில் 1931 ம் ஆண்டு டொனமூர் யாப்பின் கீழ் பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இது 1978 ம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்புவரை



நடைமுறையில் இருந்தது. இன ஒற்றுமையைத் தூண்டி தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதல், நிர்வாக ஓட்டத்தை துரிதப்படுத்தி தேசிய அபிவிருத்தியை துரிதப்படுத்துதல், பிரதிநிதிகள்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்



# ஈரானின் தாக்குதல் வெற்றியா? தோல்வியா?

**வேல்ஸில் இருந்து அருஸ்**

ஈரானின் தாக்குதல் வெற்றியா தோல்வியா என்ற விவாதங்கள் எழுந்தவண்ணம் உள்ளன. ஈரானின் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை சுட்டுவீழ்த்தியதை வெற்றியாக மேற்குலகம் வர்ணித்தாலும், உண்மையில் இந்த தாக்குதல் என்பது ஈரான் எதிர்பார்த்ததைவிட அதற்கு வெற்றியையே கொடுத்துள்ளது என்பது தான் உண்மை.



தாக்குதல் அதிக சேதங்களை விளைவிக்கவில்லை என்று கூறப்பட்டாலும் அது தோல்வியல்ல என்பதே யதார்த்தம்.

**ஏன் என்பதற்கான காரணங்கள் இதோ**

கடந்த 14 ஆம் நாள் இரவு ஈரானும் ஈராக், ஏமன், சிரியாவில் உள்ள அதன் ஆதரவு படையினரும் இஸ்ரேல் மீது நூற்றுக்கணக்கான ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மற்றும் ஏவுகணை தாக்குதலை தொடுத்திருந்தனர்.

இந்த தாக்குதல் அதிர்ச்சிகரமானது அல்ல. கடந்த ஏப்பிரல் முதலாம் நாள் இஸ்ரேல் வான்படையின் எப்-35 விமானங்கள் நவாட்டிம் வான்படைத்தளத்தில் இருந்து இரகசியமாகச் சென்று சிரியாவின் தலைநகர் டமஸ்கசில் இருந்து ஈரானின் தூதரகத்தில் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டிருந்த காட் படைப்பிரிவு எனப்படும் ஈரானின் வெளியக புலனாய்வு மற்றும் தாக்குதல் படையணியின் கட்டளை அதிகாரி மற்றும் பிரதிக்கட்டளை அதிகாரி உட்பட 3 ஜெனரல் தர அதிகாரிகளையும் மேலும் 7 தூதரக அதிகாரிகளையும் படுகொலை செய்திருந்தது.

இந்த நிலையில் இஸ்ரேலுக்கு தகுந்த பதிலடி வழங்கப்படும் என ஈரான் தெரிவித்து வந்திருந்தது. அதுமட்டுமல்லாது தாக்குதல் இடம்பெறுவதற்கு 72 மணிநேரத்திற்கு முன்னரே அது அரபு நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் தான் இஸ்ரேலை தாக்கப்போவதாக தெரிவித்திருந்தது. அதாவது யாருமே தொடமுடியாத வல்லரசு நாடுகள் என கணிக்கப்பட்ட நாடுகளுக்கு 72 மணிநேரத்திற்கு முன்னர் தகவல் அனுப்பிவிட்டு மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகும். உண்மையான வாக்குறுதி என்பது இந்த படை நடவடிக்கைக்கு ஈரான் இட்டபெயர்.

ஈரானின் பதில் தாக்குதல் என்பது எதிர்பாராதது அல்ல. ஒவ்வொரு தாக்குதலுக்கும் ஈரான் பதிலடி கொடுத்தே வந்துள்ளது. ஆனால் இந்த முறை அது மாறுபட்டது அதாவது இஸ்ரேலை



முதல்முறையாக நேரிடையாக தாக்கியுள்ளது. தொழில்நுட்பரீதியாக பார்த்தால் ஈரானின் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் எதிரிகளின் வான்பாதுகாப்பை உடைத்து ஊடுருவியுள்ளன.

ஈரானின் கைப்பசொனிக் எவுகணைகளையும், ஆளில்லாத தாக்குதல் விமானங்களையும் அமெரிக்காவினதும், இஸ்ரேலினதும் ரடார்களால் தடுக்கமுடியவில்லை, அதாவது ரஸ்யாவின் கைப்பசொனிக் ஏவுகணைகளை வீழ்த்தியதாக இதுவரை காலமும் கூறிவந்த கதைகளை எல்லாம் ஈரானின் தாக்குதல் பொய்யாக்கியுள்ளது. அதாவது அமெரிக்காவினதும், இஸ்ரேலினதும் வான்பாதுகாப்பை ஈரானின் கைப்பசொனிக் ஏவுகணைகள் ஊடுருவும்போது ரஸ்யாவின் கின்சால் ஏவுகணைகளை தடுப்பது இலகுவான தல்ல.

இந்த தாக்குதலின் வெற்றி தோல்விகளை சிலர் 120 நிமிட கொலிவூட் அக்சன் திரைப்படம் போல விவாதிக்கின்றனர். ஆனால் சான் சூ நூறு வருடங்களுக்கு முன்னர் கூறியது போல 100 சண்டைகளில் பங்கெடுத்து 100 சமர்களையும் வெல்வது திறமையல்ல மாறாக முன்னர் எப்போதும் பாத்திராத களமுனையில் வெல்வது தான் திறமை. அதனைத் தான் ஈரான் எட்டியுள்ளது.



சதுரங்க ஆட்டத்தில் மிகப்பெரும் ஆட்டக்காரரை தாக்கியுள்ளது ஈரான். அதாவது இந்த விளையாட்டு இன்னும் முடியவில்லை. டமஸ்கஸ் தாக்குதலின் பின்னர் இஸ்ரேலை தாக்க ஈரான் தயாரானபோதும் அது மூன்றாவது உலகப்போரை ஆரம்பிக்கவிரும்பவில்லை.

ஆனால் அது தனது தாக்குதலின் குறிக்கோளை 3 வழிகளில் எட்டியுள்ளது. முதலாவது துணைஇராணுவக் குழுக்களின் மூலம் தாக்காது நேரிடையாக தாக்கியுள்ளது. இரண்டாவது பல ஏவுகணைகள் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டபோதும் நவாட்டிம் என்ற இஸ்ரேலின் இரண்டாவது பெரிய வான்படைத்தளத்தை தாக்கியுள்ளது. மூன்றாவது இஸ்ரேல் திருப்பித் தாக்கவில்லை.

2020 ஆம் ஆண்டு ஈராக்கில் வைத்து காட் படையணியின் கட்டளை அதிகாரியான ஜெனரல் சொலமனியை அமெரிக்கா தாக்கியழித்ததற்கு பதிலடியாக ஈராக்கில் உள்ள அமெரிக்கத் தளங்களை ஈரான் தாக்கிபோதும் அமெரிக்கா ஈரானை திருப்பித்தாக்கவில்லை. எனினும் இதற்கான பதிலடியை இஸ்ரேல் கொடுக்குமா இல்லையா என்பதை இப்போது கூறமுடியாது.

ஆனால் இந்த படைநடவடிக்கை மூலம் ஈரான் எதனை சாதித்தது என்பதே முக்கியமானது. அதாவது ஈரானின் நடவடிக்கை என்பது படைத்துறைவெற்றியைவிட அதிகளவில் அரசியல் வெற்றியை ஈட்டியுள்ளது. அமெரிக்காவுடன் போரை மேற்கொள்ள ஈரான் விரும்பவில்லை. அதனை தான் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு விரும்பியிருந்தார். ஆனால் அது நிறைவேறவில்லை.

தன்னிடம் உள்ள மிகச் சிறந்த தற்கொலைத்தாக்குதல் விமானங்களையும், ஏவுகணைகளையும் அது பயன்படுத்தவில்லை. சாராணை ஆயுதங்களையே பரீட்சித்து பார்த்திருந்தது. ஆனால் அந்த சாராணை விமானங்களும், ஏவுகணைகளும் இஸ்ரேலின் வான்பாதுகாப்பை உடைத்து உள்நுளைந்ததுடன், இஸ்ரேலுக்கு அதிக பொருளாதார இழப்பையும் கொடுத்துள்ளது. அதாவது ஈரானுக்கு ஏறத்தாழ 60 மில்லியன் டொலர்கள் செலவானபோதும், இஸ்ரேலுக்கு 1200 மில்லியன் டொலர்கள் செலவாகியுள்ளது.



இஸ்ரேலை தாக்கமுடியாது என்ற தோற்றப்பாட்டை ஈரான் மீண்டும் உடைத்துள்ளது. ஈரானின் பிரதான குறிக்கோள் கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் நாள் ஹமாஸ் செய்ததுபோல இஸ்ரேலைக் குழப்புவது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## ஒருவிரல்... தொடர்ச்சி ...

கண்காணிக்க வேண்டிய தேர்தல் தொகுதிகள் சிறியதாக இருப்பதால் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றக்கூடிய நிலை ஏற்படல், பிரதிநிதித்துவத்தில் வெற்றிடம் ஏற்படுகையில் இடைத்தேர்தல்கள் இடம்பெறும் நிலையில் இதனால் ஜனநாயகம் சிறப்படையும் என்று பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறைக்கு சார்பாக பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

எனினும் பெரும்பான்மை வாக்காளர் விரும்பாத ஒருவரை உறுப்பினராக தெரிவு செய்யக்கூடிய நிலை பிரதேசவாரி பிரதிநிதித்துவத்தில் காணப்பட்டதோடு நாடு தழுவிய ரீதியில் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கும், பாராளுமன்றத்தில் அவை பெறும் ஆசனங்களுக்கும் இடையில் முரண்பாட்டுத்தன்மை காணப்பட்டது. இத்தகைய பல குறைபாடுகளும் 1977 இல் 5/6 பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால உள்நோக்கங்களுமே விகிதாசார தேர்தல் முறை 1978 ம் ஆண்டு யாப்பின் ஊடாக அறிமுகம் செய்யப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்ததாக அரசியற்றுறை விரிவுரையாளர்கள்பலரும்வலியுறுத்தியுள்ளனர்.

விகிதாசார தேர்தல் முறை எனப்படுவது, ‘ஒரு தேர்தல் மாவட்டத்தில் அல்லது பல்லங்கத்துவ தேர்தல் தொகுதியில் ஒரு கட்சியோ அல்லது குழுவோ பெற்ற வாக்கு விகிதாசாரத்திற்கேற்ப ஆசனங்களை பகிர்ந்தளிக்கின்ற கணிதரீதியான ஒரு தேர்தல் முறையாகும்’. தேர்தல் தொகுதியொன்றில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும், குழுவும் மக்கள் மத்தியில் பெற்றிருக்கும் செல்வாக்கிற்கேற்ப அவற்றிற்குரிய ஆசனங்களை அல்லது பிரதிநிதித்துவத்தினைப் பங்கிட்டு வழங்கும் தேர்தல் முறையே விகிதாசார தேர்தல் முறை என்றும் கூறப்படுகின்றது. இங்கிலாந்தின் தோமஸ் குரே என்பவரால் விகிதாசார பிரதிநிதித்துவ முறை முதலில் அறிமுகம் செய்யப்பட்டது.

பெரும்பான்மை வாக்காளர்கள் விரும்புகின்ற கட்சியைச் சேர்ந்தவரே, உறுப்பினராக வரக்கூடிய நிலையும் கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப உறுப்பினர்களைதெரிவு செய்யக்கூடிய நிலையும் காணப்படுவதால்கூடுதலானஜனநாயகத்தன்மை மிக்க தேர்தல் முறையாக விகிதாசார தேர்தல் முறைமை காணப்படுகின்றது. நாட்டின் சகல விதமான அரசியல் அபிப்பிராயங்களும் ஆட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் பெறுவதை இயலச் செய்வதாக அமைந்திருத்தல். பலமான எதிர்க்கட்சி ஒன்றினை உருவாக்குதல் போன்ற பல விடயங்கள் விகிதாசார தேர்தல் முறைக்கு சார்பாக முன்வைக்கப்படுகின்றன. மேலும் இத்தேர்தல் முறை நாட்டின் அபிவிருத்திக்கும், ஐக்கியத்துக்கும் வலுசேர்க்கும் என்றெல் லாம் தெரிவிக்கப்பட்டபோதும் எதிர்பார்ப்புக்கள் பலவற்றையும் சிதைத்த ஒரு தேர்தல் முறையாகவே இத்தேர்தல்முறை விளங்குகின்றது.

### புதிய தேர்தல் முறை

வாக்காளர்களால் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாத தேர்தல் முறை. கணித ரீதியில் அமைந்த தேர்தல் முறை. தேர்தல் செலவுகள் அதிகம். பிரதிநிதிகளின் கண்காணிப்பு எல்லை அதிகம். பிரதிநிதிகளுக்கும் மக்களுக்கும் இடையில் குறைந்த தொடர்பு. பல்லங்கத்துவ தேர்தல் தொகுதி முறை பின்பற்றப்படுவதால் தமது உண்மையான பிரதிநிதி யாரென மக்கள் அடையாளம் காண இயலாத நிலை தோன்றும் என்றெல்லாம் இத்தேர்தல் முறைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. மொத்தத்தில் அபிவிருத்திக்கு பதிலாக வீழ்ச்சிக்கும், ஐக்கியத்துக்கு பதிலாக விரிசலுக் கும் விகிதாசார தேர்தல் முறை வித்திட்டுள்ளது.



இதனை கருத்தில் கொண்டு புதிய தேர்தல் முறைமையை முன்வைக்கும் முன்னெடுப்புக்கள் தொடர்ச்சியாகவே இடம்பெற்று வருகின்றன. எனினும் இது சாத்தியப்படாத நிலையில் இப்போது பாராளுமன்ற தேர்தல் முறைமையில் திருத்தத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் மீண்டும் களமிறங் கியுள்ளது. இத்தேர்தல் முறைமையின் அடிப்படையில் 225 உறுப்பினர்களில் 160 பேர் நேரடியாக வாக்காளர்கள் மூலமாக தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் மீதமுள்ள 65 பேர் விகிதாசார அடிப்படையில் தேசிய அல்லது மாகாண அல்லது மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் ஆலோசனையை தொடர்ந்து அமைச்சரவைக்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக பிரதமர் தலைமையில் அமைச்சரவை உப குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

### ஒன்றிணைந்து செயற்படுதல்

இதேவேளை விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் அரசியல் பிரதிநிதித்துவ அதிகரிப்பிற்கு வலு சேர்த்தது.பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களில் மலையக பிரதிநிதிகள் ஆதிக்கம் செலுத்தினர். இதனூடாக பல்வேறு அபிவிருத்திகள் இம்மக்களை வந்தடையும் வாய்ப்பும் உருவானது. மலையக மக்களை பொறுத்தவரையில் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு தொழில்வாய்ப்பு, பாடசாலை வளமேம்பாடு போன்ற பல அபிவிருத்திகளும் இதில் உள்ளடங்கும். பிரதேசவாரி பிரதிநிதித்துவம் பெரிதும் பாதிப்புகளுக்கே வித்திட்டது. இந்நிலையில் இம்மக்களின் பிரதிநிதித்துவத்தை மழுங்கடித்து அவர்களின் அபிவிருத்திகளை பாழ்படுத்த புதிய தேர்தல் முறை காரணமாக இருந்துவிடக்கூடாது. இந்நிலையில் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் எழுச்சிக்காக புதிய தேர்தல் முறையை சாதகமாக்கிக் கொள்ள புத்திஜீவிகளும், அரசியல்வாதிகளும், சிவில் அமைப்புக்களும் ஒன்றிணைந்து செயற்படுதல் வேண்டும் என்பதே உண்மையாகும்.

• • •

## நிலக் கூட்டுரிமை ... தொடர்ச்சி ...

புலிக்கு பல்லை பிடுங்குவதற்கு ஒப்பானது. முகவராண்மைத்தன்மை தான் பிரதிநிதித்துவப்படுத்தலை விடுதலை மையத்தை நோக்கி நகர்த்திக் கொண்டே இருக்கும், இது கட்டுடைக்கப்படும் போது தான் பிரதி நிதித்து வப்படுத்தலை அடக்குமுறைக் குட்பட்ட மக்கள் சார்பாக அடக்குமுறைக்குட்பட்ட மக்கள் தவிர்த்து ஏனையோர் செய்ய முற்படுதல் நிகழ்கின்றது, இது இயல்பாக உருவாவதல்ல.

மையத்தை உடைத்து, பரவலாக்கப்பட்ட பிரதிநிதித்துவப்படுத்தலின் பல்வகைத்தன்மையில், அதிகாரத்தை கையில் கொண்டுள்ளோரிடம் பிரதிநிதித்துவக் கட்டமைப்பு ஒப்படைக்கப்பட்டு, அவ் அதிகாரம் தான் உண்மை என நினைப்பதை, உண்மையாக கட்டமைத்து பொது வெளியில் அரசியல் நுகர்வுக்காக விடுகின்றது. அதிகாரம் கட்டமைக்கும் அரசியல் உண்மையில் மற்றமைகளின் சொல்லாடல்களுக்கான வெளி இல்லாமல் போகின்றது. மற்றமைகளின் விவரணம் என்பது மாற்று விவரணம், அது அதிகாரம் கட்டமைக்கும் உண்மையை சிக்கலுக்குட்படுத்துகின்றது.

பூக்கோ, உண்மைக் கட்டமைப்பு, அதிகார வரம்புகளுக்கு அப்பாற்ப்பட்டதாக இருக்க முடியாது என குறிப்பிடுகின்றார். மேற்கூறப்பட்ட இரண்டுமே, ஒன்றோடொன்று



பின்னிப்பிணைந்துள்ளது. மற்றமைகளின் கதைகள் எப்போதுமே அதிகாரத்தையும் அதிகாரம் கட்டமைக்கும் உண்மையை சவாலுக்குட் படுத்தும் போது அதிகாரத்தின் வலுச்சமநிலை கேள்விக்குட்படுத்தப்படுகின்றது. இவ்வாறான தொரு கொதிநிலை நிச்சயமற்ற தன்மையை கட்டமைத்துக் கொண்டே இருப்பதால், அச்சத்தை உருவாக்குகின்றது. அதிகாரம் தனது ஐயுறவிலா உண்மைக்குள் இருந்து தான், நிச்சயமற்ற தன்மையை அரசியல் நுகர்விற்காக பரப்புகின்றது. ஆனால் மற்றமைகள் கட்டமைக்கும் உண்மை, அதிகாரத்தின் ஐயுற வில்லாத உண்மையை கட்டவிழ்க்கின்றது.

தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கை விழுமியங்கள் அதிகாரம் கட்டமைக்க முயலும், ஐயுறவில்லா உண்மையின் நிச்சயத்தன்மையை கேள்விக்குட்படுத்திக் கொண்டே இருக்கப் போகின்றது. ஏனெனில் அது மற்றமைகள் தங்கள் அடக்குமுறைக்குட்பட்ட வாழ்ந்த, வாழ்கின்ற அனுபவத்தால் கட்டமைத்த உண்மை. இதனால் தான் தமிழினப்படுகொலை என்பது எப்போதுமே அதிகாரம் கட்டமைக்க முயலும் உண்மையை சிக்கலுக்குட்படுத்தும். ஆயர் இராஜப்பு ஜோசப்பின் தமிழினப் படுகொலைக் கோரிக்கையின் தீர்க்க தரிசனப் பார்வை, சாட்சியங்களின் விவரணங்களிலிருந்து உண்மையைக் கட்டமைத்தலை மையமாகக் கொண்டது. மற்றமைகளின் உண்மை, முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்ட இனப்படுகொலையிலிருந்து உயிர் பிழைத்த சாட்சியங்களிலிருந்து கட்டமைக்கப்பட்ட உண்மை, பொய்மையை தூங்கவிடாது நீதியை தட்டி எழுப்பிக் கொண்டே இருக்கப்போவது.

தமிழினப் படுகொலைக் கோரிக்கையூடாகத்தான் தேசக் கோரிக்கையையும், தமிழ்த்தேசிய நம்பிக்கையின் விழுமியங்களையும் மீட்டெடுக்க முடியும் என்பது ஆயர் இராஜப்பு ஜோசப்பின் நம்பிக்கையாக இருந்தது. ஈழத்தமிழர்கள் ஒரு தேசத்திற்குரியவர்கள் என்பதை, தமிழினப்படுகொலைக் கோரிக்கையூடான நீதிப் பயணத்தில்தான் நிறுவ முடியும் என நம்பினார். அந்த நம்பிக்கை தமிழ்த்தேசிய நம்பிக்கையிலிருந்து எழுகின்றது.

தொடரும்...

ஈரான் மீது ... தொடர்ச்சி ...

மாகும். இதனை, ஒரு இனப்படுகொலை என்று தமிழ் சமூகத்தில் உள்ள பலர் அழைக்கிறார்கள்.

2022 ஆம் ஆண்டு மே 18 ஆம்திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அனுட்டிப்பதற்கு கனடா பாராளுமன்றம் ஏக மனதாக வாக்களித்திருந்தது.

இதேவேளை இலங்கை அடுத்தமாதம் யுத்த வெற்றித் தினத்தை கொண்டாடும்போது கனேடியத் தலைவர்கள் இனப்படு கொலைக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கலாம் என்பதால், இலங்கை மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பதாக உயர்மட்ட இராஜதந்திர வட்டாரமொன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு, கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திர ரீதியில் மோதலைத் தூண்டியது. இதற்கு இலங்கை கனேடிய தூதுவரை அழைத்து எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது. முன்னர் இலங்கை எதிர்ப்பை தெரிவித்திருந்தநிலையில், இம்முறையும் இவ்வாறான குற்றச்சாட்டுகள் மீண்டும் இடம்பெறுமா என்பதை உறுதிப்படுத்த கொழும்பு ஆர்வமாக உள்ளதாக உயர்மட்ட இராஜதந்திர வட்டாரம் தெரிவித்ததாக டெய்லி மிரர் பத்திரிகை தெரிவித்துள் ளது.

“போரின் போது இலங்கையில் இடம் பெற்ற சம்பவங்கள் இனப்படுகொலைக்கு சமமானவை அல்ல என்று கனேடிய சமஷ்டி அரசாங்கம் முடிவு செய்திருந்தாலும், கனேடிய தலைவர்கள் இத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைத்த வரலாற்றைக் கொண்டுள்ளனர்’ என்று அந்த அதிகாரி கூறியுள்ளார்.

அதேவேளை, நினைவுச்சின்னத்தை நிர்மா ணிப்பதற்கான பிராம்ப்டன் நகர சபையின் முயற்சிகளை இலங்கையால் முறியடிக்க முடிய வில்லை என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார், இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை கனேடிய சமஷ்டி அரசாங்கம்நிராகரித்த போதிலும், நகர சபைமீதான அதிகார வரம்பைக் கொண்டிருக்க வில்லையாதலால் இந்த நடவடிக்கையை நிறுத் துவது இலங்கைக்கு கடினமாக உள்ளதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

ஈரானின் தாக்குதல் ... தொடர்ச்சி ...

இப்போது இஸ்ரேல் என்ன செய்வது? ஈரானின் ஆதரவு படைகளை வேறு நாடுகளில் வைத்து தாக்குவதா? அதனை தான் அவர்கள் இதுவரைகாலமும் செய்துவந்தனர்.

அப்படியானால் ஈரானை நேரிடையாக தாக்குமா இஸ்ரேல் அது மிகப்பெரும் போரை அந்த பிராந்தியத்தில் ஏற்படுத்திவிடும். அமெரிக் காவையும் அதற்குள் இழுத்துவிடும். அமெரிக் காவுக்கு தற்போது தேர்தல் ஆண்டு வேற.



அதாவது தற்போது பந்து இஸ்ரேலின் பக்கம். அதாவது ஏப்பிரல் 1 ஆம் நாள் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலின் பின்னர் ஈரான் என்ன நிலையில் இருந்ததோ அதேநிலையில் தற்போது இஸ்ரேல் உள்ளது. இந்த சவாலை இஸ்ரேல் தீர்க்குமா?

ஈரான் மக்களை அல்லது இலக்குகளை இஸ்ரேல் தாக்கினால் திரும்பவும் கடுமையாக தாக்குவோம் என ஈரானின் முப்படைகளின் தளபதி ஜெனரல் கொசீம் சலாமி தெரிவித்துள்ளார்.

அதாவது ஏப்பிரல் 14 தாக்குதல் என்பது பதிலடி அல்ல ஈரான் புதிய ஒரு விதியை நிறுவியுள்ளது. சொல்லைவிட செயல் முக்கயமானது என்பது தான் அது. அதாவது போரை ஆரம்பிப்பதற்காக ஈரான் இஸ்ரேலைத் தாக்கவில்லை, இஸ்ரேலுக்கு உள்ளேயும் எம்மால் எந்த இலக்கையும் தாக்கமுடியும் என்பதை ஈரான் உறுதிப்படுத்தியுள்ளது.

அதாவது அமெரிக்காவின் துணையுடன் இஸ்ரேல் தக்கவைத்திருந்த தனது ஆழுமையை அது இழந்துவருகின்றது.

தேர்தல் கள ... தொடர்ச்சி ...

கோட்டாபயவின் வெளியேற்றத்தையடு த்து மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றவர்கள் என்ற நிலையிலிருந்து ராஜபக்ஷக்கள் பெருமளவுக்கு கீழறங்கிவிட்டார்கள். இந்த சரிவிலிருந்து மேலெழுவதற்கு அண்மைக் காலத்தில் அவர்களுக்கு வாய்ப்புக்கள் இல்லை. அதனால், இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் தமக்கு நெருக்கடிகளைக் கொடுக்காத அல்லது தமக்கு சலுகைகளை வழங்கக்கூடிய ஒருவர் ஜனாதிபதியாக வருவதைத்தான் அவர்கள் முதலில் விரும்புவார்கள். அவ்வாறு அமையாவிட்டால், தமக்கு இருக்கின்ற செல்வாக்கை ஏதாவது ஒரு முறையில் தக்கவைத்துக்கொள்வதற்கு முனைவார்கள்.

அந்த வகையில்தான் அவர்கள் ஒரு வேட்பாளரை நிறுத்தக்கூடும் என்ற ஒரு கணிப்பு இருக்கின்றது. அவர்கள் இணக்கப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய ஒருவர் என்றால், அது நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். ஏனெனில் சஜித் பிரேமதாஸவுடனோ, அநுரகுமாரவுடனோ அவர்கள் இணக்கப்பாட்டுக்குச் செல்ல முடியாது. அதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

ஆனால், ரணிலுக்கும் சஜித்துக்கும் இடை யில் ஒரு உடன்பாடு இறுதிக்கட்டத்தில் அவர்கள் ஒரு தரப்பாக நிற்கின்ற கட்டத்தில், ராஜபக்ஷக்களுக்கு வேறு தெரிவுகள் இருக்காது அவர்கள் நிச்சயமாக ஒரு வேட்பாளரை நிறுத்த வேண்டியிருக்கும். அவ்வாறில்லாவிட்டால் அவர் கள் வேட்பாளர்களை நிறுத்தமாட்டார்கள்.

• • •

அரசுகளை ... தொடர்ச்சி ...

செய்யுமாறு எமக்கு அரசுகளிடம் இருந்து வரும் அழுத்தங்களை விட இந்த நிறுவனங்களிடம் இருந்து வரும் அழுத்தங்கள் தான் அதிகம். 2021 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இடம்பெற்ற கலவரத்தின் பின்னர் எமது நிறுவனத்திற்கு அமெரிக் காவின் இரு பிரதான கட்சிகளிடம் இருந்தும் மிரட்டல்கள் வந்திருந்தன.

ஜனவரி 6 ஆம் நாள் அமெரிக்காவில் இடம் பெற்ற கலவரத்தின் பின்னர் அது தொடர்பான தகவல்களை நாம் தமக்கு தரவேண்டும் இல்லை என்றால் அது அமெரிக்காவின் சட்டவிதிகளின் படி குற்றம் என குடியரசுக் கட்சியின் காங்கிரஸ் சபை உறுப்பினரிடம் இருந்து எமக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

தகவல்களை நாம் குடியரசுக் கட்சிக்கு வழங்கக்கூடாது மாறாக வழங்கினால் என்றால் அது அமெரிக்காவின் சட்டவிதிகளின் படி குற்றம் என இரண்டு வாரங்கள் கழித்து ஜன நாயகக்கட்சியிடம் இருந்து எமக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இந்த இரண்டும் அமெரிக்காவில் உள்ள சட்டங்கள் என்பது தான் எமக்கு குழப்பமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ரெலிகிராம் சமூகவலைத்தளத்தை 900 மில்லியன் மக்கள் உலகில் பயன்படுத்தி வரு கின்றனர்.

அரசியல் கைதி ... தொடர்ச்சி ...

சிறைச்சாலையில் அவரைச் சந்தித்து உரை யாடியிருந்தேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கச் சீருடையில் உள்ள படத்தை முகநூலில் பகிர்ந்ததாகக் குற்றம் சுமத்தி அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தி தன்னைக் கைது செய்து அடைத்துள்ளனர் என்று தெரிவித்தார்.

மேலும் அடுத்த தடவை எப்போது நீதி மன்றில் முற்படுத்துவார்கள் என்ற திகதி கூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளனர் என்றும் அவர் கூறினார். தன் னைக் கைது செய்து அடைத்துள்ளமையால் தனது பிள்ளைகள் அநாதரவான நிலையில் இருக் கின்றனர் எனவும், தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறும் மிகுந்த வேதனையுடன் அவர் கோரினார்” என்றும் கஜேந்திரன் தெரிவித்தார்.



## கிழக்கில் தமிழ்... தொடர்ச்சி ...

சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகளாக பேரினவாதத் தலைவர்கள் தமிழர்களை ஏமாற்றியுள்ளார்கள். அறவழி,ஆயுத வழி, இராஜதந்திர வழி அனைத்தும் உள்நாட்டில் பேரினவாதிகளிடம் பலிதமாகவில்லை.

தற்போது போட்டியிடவுள்ள ஜனாதித் தேர்தலுக்கான வேட்பாளர்களும் தமிழர்களுக்கான தீர்வினை முன்வைக்கவில்லை. இப்படியிருக்கும் போது சிங்கள வேட்பாளர்கள் தமிழர்களின் வாக்குகளைப் பெறும் வாய்ப்பினை இழக்கும் நிலையில் உள்ளனர்.

எனவேதான் தமிழர்களின் நியாயமான கோரிக்கையினை முன்வைத்து வடக்கு கிழக்கில், மக்களாணையினைப்பெறுவதற்கு தமிழ்ப் பொது வேட்டாளரை நிறுத்த வேண்டிய நிலையினை சிங்கள வேட்பாளர்கள் தோற்றுவித்துள்ளனர். சிங்கள வேட்பாளர்கள் இனியாவது தமிழர்களுக்கான நியாயமான தீர்வினை எழுத்து மூலமாகத் தயாரித்து தமிழர்களின் ஒப்புதலைப் பெற்றால், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தாமல் விடுவது பற்றிச் சிந்திக்கலாம்.

**தற்போது அன்னை பூபதியின் நினைவு அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.அவரது தியாகத்தினை கிழக்கு மக்கள் எவ்வாறு பார்க்கின்றனர்?**

அன்னைபூபதி அம்மா தமிழர் உரிமை சார்ந்து அவர்களின் நியாயமான போராட்டத்தினை ஏற்றுக் கொண்டு அறவழியில் உண்ணா நோன்பு இருந்து தன்னுயிரைத் தியாகம் செய்தார்.அவரது தியாகத்தை கிழக்கு மக்கள் மட்டும் அல்லாமல், ஈழத்திலுள்ள தமிழர்கள்,புலம் பெயர்ந்த தமிழ் உறவுகள், தமிழக உறவுகள் அனைவரும் மானசீகமாக மதிக்கின்றனர். துதிக்கின்றனர். அன்னையின் தியாகம் தமிழரின் விடுதலை வேட்கைக்கான அணையாத விடுதலைத் தீபமாகும்.

**அவரது தியாகத்தினை தமிழ் தேசிய அரசியல் சரியாக கடைப்பிடிக்கின்றதா?**

அன்னை பூபதி அவர்களின் தியாகத்தினை தமிழ்த்தேசியவாதிகள் மதித்தே ஆக வேண்டும். அவர்கள் மதித்தும் வருகின்றார்கள். அவ்வாறு மதிக்கின்றவர்கள் அன்னாரது தியாகத் தினை தமிழ்த் தேசியவாதிகளாக இருந்து கடைப்பிடிக்கிறனர். ஆனால்,கிழக்குப் பிரதேசவாதக் கும்பல் அன்னை பூபதி அவர்களின் தியாகத்தினை பேரினவாதிகளின் தேவைக்காக மதிக்கவில்லை. அவர்கள் பேரினவாதிகளின் கைப்பொம்மைகளாக மாறியதால் அன்னை பூபதியாரை மறந்து விட்டனர்.

**இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் நீங்குவதற்கான சாத்தியமான வழிகள் உள்ளதா?**

தன் முனைப்புச் சிந்தனையில் (நுபழ) இருந்தும், தன்னிச்சையான செயற்பாடுகளில் இருந்தும் ஒருவர் விடுபட்டு,கட்சியின் கொள்கை கோட்பாட்டுக்கமைய தமிழ் மக்களின் நலன் கருதி, தமிழ்த்தேசியத்திற்காக உழைக்க முற்பட்டால், தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடி தீர வாய்ப்புள்ளது.

அவர் விடாக்கண்டனாக மாறினால், அதற்கான பதிலை மக்கள் தேர்தலின் போது அளிப்பர். சுயநலன்களை விடவும் தமிழர்களின் பொதுநலன் முக்கியமானது என்று அம்மனிதன் உணர வேண்டும்.

**அதற்கான முன்னெடுப்புகள் ஏதும் செய்யப்படுகின்றதா?**

தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் தொடர்கின்றன. தனிநபர் பிடிவாதம், தன் முனைப்பான போக்கு நீங்கி கட்சி நலன், தமிழர் நலன் பற்றி ஆழமாகச் சிந்திக்கும் போது முன்னெடுப்புகள் வெற்றி பெற வாய்ப்புள்ளது. கொழும்புச் சிந்தனையை விட வடக்கு கிழக்கு மக்களின் வலிகள், உணர்வுகள், உரிமைகள் சார்ந்து சிந்தித்தால் நெருக்கடிகள் தீரும்.

• • •

## தமிழ்ப் பொது... தொடர்ச்சி ...

சத்தியை பெற்றுக் கொடுக்கும் என்ற ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றது.

நடைபெறப்போகும் தேர்தலில் வேட்பாளர்கள் எவரும் 50 வீதத்தை எட்ட முடியாத நிலைமை ஏற்பட்டால் தமிழ் கட்சிகளுடன் பேரம் பேச வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படும் எனவும் தமிழ் தரப்பினர் கணக்கு போடுகின்றார்கள்.

தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரையில் இந்த விடயத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இரண்டு விடயங்கள் முக்கியம். ஒன்று - அனைத்து தமிழ்க் கட்சிகளும் அரசியல் காள்புணர்வுகளைப் புறந்தள்ளி கொள்னை ரீதியாக இந்த விடயத்தில் இணைய வேண்டும். இரண்டு - தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்ன என்பதை ஒருமித்த குரலில் முன்வைக்க வேண்டும். இந்த இரண்டும் சாத்தியமானால், தமிழ் மக்கள் அந்தக் கோரிக்கை க்குப் பின்னால் அணிதிரள்வார்கள்.

• • •

## நாட்டுப்பற்றாளர் ... தொடர்ச்சி ...

பெற்றுவருகின்றன. பெருமளவில் பொதுமக்கள் கலந்துகொண்டு அன்னைக்கு மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான இந்திய இராணுவத்தின் பேரை நிறுத்துமாறு கோரி ஜனநாயக வழிகளில் போராடிய அன்னை தனது போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்திருந்தார்.

## மர்மமான ... தொடர்ச்சி ...

அவர் கொலை செய்யப்பட்டுவிட்டார். சில நாட்களின் பின்னர் அதே இடத்தில் மற்று மொரு மாணவனின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

விவேக் சைனி என்ற மாணவன் போதை வஸ்த்து குழுவினரால் 50 முறை சுத்தியலால் தாக்கி கொல்லப்பட்ட காணொளிகள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அமெரிக்காவின் ... தொடர்ச்சி ...

போகலாம் என்ற அச்சங்கள் ஏற் பட்டுள்ளது.

இது உலகின் பொருளாதாரத் தையும் பாதிக்கும். 2022 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கடன்சுமை 1.4 றில்லியன் டொலர்களாக அதிகரித் திருந்தது. ஆனால் கடந்த ஆண்டு அது மேலும் 1.7 றில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. உலகின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்காவின் பொருளாதாரம் முக்கியமானது. ஆனால் தற்போதைய அமெரிக்காவின் முன்னேற்றம் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு உகந்தது அல்ல என அனைத்துலக நாயணநிதியம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தேசிய கடன்சுமை கடந்த டிசம்பர் மாதம் 34 றில்லியன்களாக உயர்ந்துள்ளது. இது பணவீக்கத்தை மிகவும் அதிகரிக்கும் என்பதுடன் உலகின் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கும் ஆபத்தானது. அடுத்த 10 வருடத்தில் அது 54 றில்லியன் டொலர்களாக உயரலாம் என கணிப்பிடப்படுகின்றது. வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது, அதிக செலவுகள், அதிகளவில் வட்டிகட்டுவது என்பவையே அதற்கான பிரதான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

## லண்டனில் தமிழர் ... தொடர்ச்சி ...

செலுத்த உத்தரவிடப்பட்டது.

இதுதொடர்பான விசாரணையில் கடையில் 12 இணங்காத மருதாணி முடி சாயப் பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டது. அமர்ஜித் சிங் இந்த தயாரிப்புகளில் 1,900 க்கும் மேற்பட்டவற்றை இறக்குமதி செய்துள்ளதாக கொள் முதல் விலைப் பட்டியல் காட்டு கிறது.

தலைக்கு பயன்படுத்தும் சாயத்தில் போதுமான லேபிள் இல்லை, தவறான பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல், காலாவதி திகதி இல்லை,பாதுகாப்பான பயன்பாட்டிற்கான போதிய அறிவுறுத்தல்கள் இல்லை மற்றும் தயாரிப்பு பாதுகாப்பு மதிப்பீடுகளுக்கு உட்பட்டதாகக் காட்டும் தகவலைக் கொண்ட தயாரிப்பு தகவல் கோப்பு இல்லை என விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் அமர்ஜித் சிங் பொருட்களை அழிக்க முந்தைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தவறிவிட்டார் என்று நீதிமன்றம் கண்டறிந்தது.

இதே வேளை, பிரித்தானியாவில் பயன்பாட்டில் இல்லாத தரநிலை மின்சாரதனம் பொருத்தும்plugs மற்றும்தீயை ஏற்படுத்தும்திறன் கொண்ட தவறான வயரிங் ஆகியவற்றுடன் 32 பாதுகாப்பற்ற மின் தயாரிப்புகள் விற்பனையில் இருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அழகுசாதனப் பொருட்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் இரண்டிலும் பிரித்தானிய இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தரின் பெயர் மற்றும் முகவரி இல்லை,இது விதிமுறைகளில் கட்டாயமாக உள்ளது.

இந்த அனைத்து குற்றச்சாட்டுகளுக்காகவும் அமர்ஜித் சிங் 4,463 பவுண்டு செலுத்த நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

## பாலஸ்தீன ... தொடர்ச்சி ...

ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் இரு நாடுகள் என்ற தீர்வுக்கும் தொடர்புகள் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவில் நிரந்தர உறுப்புரிமை பெறுவதற்கு பாலஸ்தீ னம் 2011 ஆம் ஆண்டு விண்ணப்பித்திருந்தது. ஆனால் பொதுச்சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த தீர்மானம் பாதுகாப்புச் சபையில் அங்கீகாரத்திற்கு வரும்போது அதனை தாம் வீட்டோ அதிகாரம் மூலம் முறியடிப்போம் என அமெரிக்கா கூறியதால் பாலஸ்தீனத்திற்கு பார்வையாளர் உறுப்புரிமை 2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

பாலஸ்த்தீனத்திற்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை அல்ஜீரியா கடந்த செவ்வாய்க்கிழமை(16) முன் வைத்திருந்தது. ஐ.நாவில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளில் 137 நாடுகளின் ஆதரவுகள் அற்கு உண்டு என பலஸ்தீனத்தரப்பு தெரிவிக்கின்றது.

கிழக்கு ஜெருசலொம், காசா மற்றும் மேற்குக்கரை உள்ளடங்கலாக பாலஸ்தீனம் தனக்கான இறைமையுள்ள தேசத்தை 1967 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய 6 நாள் போருக்கு முன்னர் கொண்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.